தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்;
தொடர்ந்து செல்வேன்!
ஏற்றதொரு கருத்தை என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும்
நில்லேன்; அஞ்சேன்!"

ஆண்டு சந்தா ரூ. 6
ஆறுமாதச் சந்தா ரூ. 3

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2 | சென்னை | 16—7—55 | சனிக்கிழமை | இதழ் 5

வில்லேந்தி நிற்போரே! மண்ணாசை மிகக்கொடிது!

நியூயார்க், ஜூலை 7-ஐ. நா சபையில் சீனாவுக்கு இடமளிக்கும் விஷயத்தில் பொறுப்புள்ள அமெரிக்கத் தலைவர்களின்எதிர்ப்பு குறைந்து வருவதாக இங்கு வந்துள்ள பர்மியப் பிரதமர் ஊ நூ முன்தினம் நிருபர்களிடம் தெரிவித்தார்.

வாஷிங்டன், ஜூலை 7-ஐ. நாவில் சீனாவுக்கு இடமளிக்கும் பிரச்சினையில் அமெரிக்காவின் கொள்கை மாறவில்லை என்று யு. எஸ். ராஜாங்க இலாகா பிரபல அதிகாரி ஹென்றி சுதாம் இன்று கூறினார்.

முன்செய்தியைப் படித்து உவகையடைந்த சமாதான விரும்பிகள் பின் செய்தியைக் கேட்டு வருத்தமே கொள்வர்; சமாதானம் தோன்றி நிலை பெறுவதற்கு மாறாக, மனித உரிமைகளைப் பாதிக்கும் யுத்த பயம் நீடித்திருப்பதைத் தவிர வேறு வழியிருப்பதாகத் தோன்றவில்லையே என ஏங்குவர்.

ஐ. நா. வைப்பற்றி ஓரளவு ஈண்டு விளக்கப்படுவது அவசியமாகிறது. 1945 ஜூன் 26-ந்தேதி சான்பிரான்சிஸ் கோவில் உலக நாடுகள் கூடி ஐ. நா. ஸ்தாபனத்தைத் தோற்றுவித்தன. அந்தத் தினத்தின் பத்தாண்டு நிறைவை உலகெங்கும் இவ்வாண்டு ஜூன் மாதத்தில் கொண்டாடினார்கள். ஐ. நா. வில் அங்கம் வகிக்கும் 60 நாடுகளின் பிரதிநிதிகளும் சான்-பிரான்சிஸ்கோவில் ஐ. நா. பொதுச்சபையின் 10-வது ஆண்டு விழா கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள்.

ஐ. நா. என்று நினைக்கையிலேயே உலக சமாதானத்துக்காகவும், அடிமை நிலையிலுள்ள நாடுகளின் விடுதலைக்காகவும் அது செய்துள்ளவை, அல்லது செய்யத் தவறியவைதாம் உடனடியாக ஞாபகத்துக்கு வருகின்றன.

யுத்தத்தைத் தவிர்க்க, சமாதானத்தை நிலை நிறுத்த, சுபிட்சத்தை வளர்க்க ஐ. நா. ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், கிரியாம்சையில் சென்ற பத்தாண்டுகளாக இலட்சியங்களை நிறைவேற்றும் பணியில் அந்தச் சபை முழு மனத்தோடு முயற்சித்திருப்பதாகச் சொல்வதற்கில்லை. குறிப்பிட்ட வல்லரசுகளின் ஆதிக்கத்தில் சிக்கியோ அல்லது அவைகளுக்குப் பயந்தோ அது சமாதானப் பாதையில் சரிவரப் பணியாற்றத் தயங்கியது அது காரணமாகவே உலகின் கண் அடிக்கடி யுத்த பயமும் மனித உரிமைகளைப் பாதிக்கும் வெறியாட்டங்களும் ஏற்பட்டு வருகின்றன.

ஐ. நா அரசியல் வேலையை சரிவர செய்யத் தவறினாலும் பல வேறுதுறைகளில் ஓரளவு சிறாகவே செயல்பட்டு வந்திருக்கிறது. உதாரணமாக வியாதிகள் தீரவும் வராமல் தடுக்கவும் சுகாதார வைத்திய வசதிகள் உலக ஸ்தாபனத்தின்மூலம் பல தேசங்களுக்குத் தரப்படுகின்றன. கல்வி சமூக கலாசாரதொடர்பு,தேசங்களிடையே ஏற்பட்டு நல்லுறவு வளர்ச் செய்வதற்காக யுனெஸ்கோ பாடுபட்டு வருகிறது. பொருளாதார நல்லுறவைத் தோற்றுவித்து பொதுப்படையாகவும், பிரதேச ரீதியாகவும் பாடுபடும் பொறுப்பு பொருளாதார ஸ்தாபனத்தினுடையது.

தருமகர்த்தா கமிட்டி என்ற பகுதிக்கு இருவகைப் பொறுப்புண்டு; (அ) சுதந்திரமில்லாத நாடுகளின் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டு ஆளும் தேச சர்க்கார்கள் பாடுபடும்படி செய்வது; (ஆ) சர்வதேச பொறுப்பாக ஒப்படைக்கப்பட்டுள்ள நாடுகளின் நிர்வாகம், உலகக்கோர்ட், உலக பாங்க் முதலியவை சர்வதேச நல்லுறவுக்கும், தொழிலியல் வளர்ச்சிக்கும் முறையே உதவுபவை. வேறு சில சிறிய ஸ்தாபனங்களும் நடைமுறையில் காரிய மாற்றி வருகின்றன. இம்மாதிரி நடைபெறும் துணை ஸ்தாபனங்களில் பெரும்பாலானவை குறிப்பிடத் தகுந்த அளவிலன்றி அடையாளப் பூர்வமாக சிறிய அளவில் வேலை செய்து வருகின்றன. இன்றைய உலகச் சூழ்நிலையில் நிர்மாண வேலைகளை விட இராணுவச் செலவுக்குத்தான் அதிக முக்கியத்துவம் இருந்து வருகிறது. அடிமை நிலையிலுள்ள நாடுகளின் விடுதலை, தருமகர்த்தா பிரச்சினை ஆகியவை, சம்பந்தமாக இருந்துவரும்-வளர்ந்துவரும் நிலைமையும் திருப்திகரமாக இல்லை. பல முறை வற்புறுத்தியும் அவற்றின் விடுதலைக்குத் தேதி குறிப்பிட்டு உழைக்க, ஆளும் நாடுகள் மறுத்து வந்திருக்கின்றன. தென்மேற்கு ஆப்ரிக்காவை தருமகர்த்தா பொறுப்பில் வைக்க மறுத்துவிட்டு அதை தென்ஆப்ரிக்க சர்க்கார் தமது நாட்டின் அங்கமாக்கிக் கொண்டும் விட்டனர். காலனிகளை வைத்திருக்கும் நாடுகளுக்கும் ஐ. நா. விவகாரங்களில் உள்ள செல்வாக்கு செல்லாக்காசாகும் வரையில் ஐ. நா. வின் அவல நிலை மாறாது என்று விடுதலை விரும்பிகள் எண்ணிடும் வகையில் நிலைமை மோசமாகிக்கொண்டு வந்திருக்கிறது. ஏகாதிபத்திய நாடுகளின் ஆதரவு ரஷ்யாவுக்கெதிராக தனக்குத் தேவையாக இருப்பதால் ஐ. நா. வின் அவல நிலைக்கு அமெரிக்கா பெரும் பொறுப்பாளியாகும் வகையில் நடந்துவந்திருக்கிறது.

ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நடந்துவரும் கெடுபிடிப்போர் காலனிகளின் விமோசனத்துக்கு மட்டுமின்றி ஐ. நா. ஸ்தாபனம் சரிவர செயலாற்றுவதற்கும் தடைக் கல்லாயமைந்து விட்டது. எந்தப் பிரச்சினை எடுத்துக் கொள்ளப்பட்டாலும் நேர்மையான முறையில் அது ஆராயப்பட்டதில்லை. ரஷ்யாவின் செல்வாக்கு அதிகரிக்குமா அல்லது அமெரிக்காவுக்கு அதிக வசதி கிடைத்திடுமா என்ற கண்ணோட்டதிலேயே எல்லா பிரச்சினைகளும் கவனிக்கப்பட்டு வந்திருக்கின்றன. நாளாக நாளாக, ரஷ்யாவையும், நவசீனாவையும் நடைமுறையில் பகை நாடுகளாகப் பாவித்துச் செயலாற்றும் மனப்பான்மை மேற்கு நாடுகளின் தரப்பில் வளர்ந்துவிட்டது.

எந்த நாடு உறுப்பினராக உளதோ அந்நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் சர்க்கார், அந்நாட்டின் பிரதிநியாக ஐ. நா. வில் இடம் பெறுவதுதான் முறை. அப்பொழுதுதான் பயனுள்ள பரிசீலனைகள் நடைபெறுவதும், சமாதான பங்கம் ஏற்படாமலிருப்பதும் சாத்தியமாகும்; அஃதின்றி சீனாவின் 60 கோடி மக்களுக்கு பர்மோசாவில் பதுங்கி அமெரிக்காவின் தயவினால் பிழைத்து வரும் ஒரு முதுகெலும்பற்ற மனிதரின் ஆளை ஐ. நா. வில் சீனாவின் பிரதிநிதியாக வைத்திருப்பது, ஆசிய விவகாரங்கள் சம்பந்தப்பட்டவரை ஐ. நா. வைப் பயனற்றதாக்கிவிட்டது என்றே கூறத் தோன்றுகிறது. சீனாவின் நியாயமான சர்க்காருக்கும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் இடமில்லாதபடி அமெரிக்கா செய்யவே, அதற்குப் பிரதியாக இலங்கை, இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகள் ஐ. நா. வில் இடம் பெறாதபடி ரஷ்யா தடுத்து விட்டது. மேலும், வடநாட்டு ஏதேச்சாதிகார சர்க்கார் ஆட்சிக்கு ஆட்பட்டு அடிமைகள் நிலையில் அவதியுறும் திராவிட மக்களைப் போல் அடிமை நிலையிலுள்ள நாடுகளின் மக்கள் வேறு இருக்கிறார்கள். ஆக மொத்தத்தில் மனித சமூகத்தில் சரிபாதி ஐ. நா. வில் இல்லாமலிருப்பதால் அது சிறு கொடிந்த பறவையாக இருந்து வருகிறது.

ஐ. நா. வின் அடிப்படையே 'ஐந்து வல்லரசு உடன்பாடு' என்பது. பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், சீனா ஆகிய ஐந்து நாடுகளும் நல்லுறவுடன் வாழ்ந்து எல்லா உலகப் பிரச்சினைகள்மீதும் மனம்விட்டுப் பேசி,விட்டுக் கொடுத்து உடன்பாடு கண்டு உலகில் சமாதானம் நிலைக்கச் செய்ய வேண்டும் என்பது ஐ. நா. சாசனத்தின் கட்டளை. இதற்கு உதவும் வகையில் 'வீடோ' (Veto) என்ற ரத்து அதிகாரம் அவற்றிற்குத் தரப்பட்டது. ஆனால், நாளாவட்டத்தில் ஐந்து வல்லரசு உடன்பாடு என்பது ஒருபுறமிருக்க கூடிப் பேசும் கடமை உணர்ச்சியே இல்லாமற் போய்விட்டது.சீனாவின் நியாயமான சர்க்கார் இடம்பெறாதது, கெடுபிடிப்போரில் ஐ. நா. உறுப்பினர்கள் கோஷ்டி மனப்பான்மை வளர்த்தது. ஆகிய காரணங்களால் ஆரம்ப நோக்கத்தின்படி கூட்டுப் பாதுகாப்புக்கான ஐ. நா. சேனை அமைய முடியாமற் போய்விட்டது. 'வீடோ' இருப்பதால் ஐந்து வல்லரசு உடன்பாட்டில் நம்பிக்கையை இழந்துவிட்டு இராணுவக் கூட்டுகளின்மூலம் பந்தோபஸ்தை உறுதிசெய்ய வல்லரசுகள் சில தனித்தனியாக பிறநாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்துகொண்டன.

அமெரிக்காவின் சீனக் கொள்கையில் ஆசியாவெங்கும் ஏற்பட்ட

அதிருப்தி, அதன் விளைவாக உருவான பாண்டுங் மாநாடு, சீனாவின் சமரச நோக்கு, ரஷ்யாவின் சமாதான சமிக்ஞைகள் எல்லாவற்றிற்கும் மேலாக ரஷ்யாவிடமும் ஹைட்ரஜன் குண்டு இருப்பது, ஆகிய யாவும் சேர்ந்து சென்ற சில மாதங்களில் நிலைமை திருந்தும்படி செய்துள்ளன. உலகப்பிரச்சினைகளைப்பற்றி மற்ற வல்லரசுத் தலைவர்களுடன் பேச, யு. எஸ். சர்க்கார் உடன்பட்டது. இதன் முதல் அறிகுறி.

ஜூலை 18ல் ஜினிவாவில் அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர், பிரிட்டனின் பிரதமர் அந்தோணி ஈடன், பிரெஞ்சுப் பிரதமர் எட்கார்பரே, ரஷ்யப் பிரமதர் புல்கானின் ஆகியவர்கள் கூடி நேரடியாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்போகிறார்

கதிரன்

கள். இதிலுள்ள ஒரே ஒரு குறை நவசீனாவின் தலைவரில்லாமலிருப்பதே. அமெரிக்காவில் ஹென்றி லூஸ் போன்றோர் செல்வாக்கு அனுமதிக்காத வரையில மாசே துங் வல்லரசுத் தலைவர்கள் மாநாடுகளில் கலந்துகொள்வது சாத்தியமில்லை. ஜூலை 18-ல் தொடங்கி நடக்கவிருக்கும் மாநாடுதான முதலாவதும் கடைசியானதும் என்று கூறும் வகையில் அமைந்துவிடக்கூடாது என்றே உலகப போர் எதிர்ப்பாளரனைவரும் எதிர்பார்த்திருக்கிறார்கள். கடந்த இரண்டாவது உலகப்போர் முடிந்ததிலிருந்து உலகத்தலைவர் நால்வர் கூடிப் பேசுவது இதுவே முதல் தடவை. அடுத்து, மறுமுறை அவர்கள் விரைவிலேயே ஆசிய மண்ணில் கூட வேண்டும். அப்போது அவசியம் சீனாவின் தலைவரும் பங்கேற்றால் தான் ஐ. நா. வின் அடிப்படையான ஐந்து வல்லரசு ஒற்றுமை என்பதற்குப் பொருளுண்டு என்பதேற்படும்.

ஜினிவா மாநாட்டின் முடிவுகளைப் பொறுத்தே உலகின் எதிர்கால வாழ்வு தாழ்வு அமைய இருக்கிறதென்று கூறினால் அது மிகையாகாது. இரு வல்லரசு சக்திகளும் கடந்த பத்து ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வந்த போக்கின் விளைவாக சமாதானத்தைக் குலைக்கக்கூடியபிரச்சினைகள்பல தோன்றியுள்ளன. ஆனால், உலகில் பெரும்பாலான மக்களின் கருத்துக்கு வல்லரசு சக்திகள் பணிந்தாக வேண்டிய நிலைமை பாண்டுங் மாநாட்டிற்குப்பின் ஏற்பட்டு வந்திருப்பதைப் பார்க்கும்பொழுது ஐ. நா.வின் பத்துவருட சாதனைக்கு நால்வர் மாநாடு ஒரு சோதனையாக விளங்கிடும் வகையில் அமைந்திருப்பதாகத் தோன்றுகிறது.

உலக நாடுகள் எல்லாவற்றின் பூர்ண பிரதிநிதித்துவ ஸ்தாபனமாக ஐ. நா. விளங்கவேண்டும்.

ஐ. நா. பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து தலைதூக்கி உலக சமாதானத்தை நிலைநாட்டும்சின்னமாக வேண்டும். சமாதான தேவதையின் திருநடனம் கோரதாண்டமாகிவிடக் கூடாது.

இதற்காக, அண்மையில்கூடவிருக்கும் நால்வர் மாநாடு செய்யப்போவது என்ன? ஏமாற்று வித்தையாகவே உலகோர் கருதுவார்கள், மாநாடு எதிர்பாராத வகையில் பகைமை வளர்த்திடும் விதத்தில் முடிந்துவிடுமானால்! பிரதேச ராணுவகூட்டு ஒப்பந்தங்கள், காமின்பார்ம் போன்ற ஸ்தாபனங்கள் அடியோடு ஒழிக்கப்படும் நிலை இந்தோ-சீனா பற்றிய ஜினிவா உடன்படிக்கை சரிவர நிறைவேற்றி வைக்கப்படும் நிலை, ஜெர்மனியை ஒன்றுபடுத்தும் பிரச்சினையிலே சுமுகமான முடிவு, ஐ. நா. விலே உண்மைச் சீனாவின் பிரதிநிதி கலந்துகொள்வதை சாத்தியமாக்குவது ஐ. நா. சாசனத்தை வல்லரசுகள் மதித்து நடக்கும் நிலை ஆகியவற்றை நால்வர் பேச்சு வார்த்தைகள் உருவாக்கவேண்டும்.

ஜூன் 26 எப்படி ஐ. நா. வின் வரலாற்றில் முக்கிய தினமோ, அதைப் போலவேதான் அக்டோபர் 24-ந் தேதியும் கருதப்படுகிறது. ஐ. நா. வின் சாசனம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதை நினைவுபடுத்தும் நாளே அக்டோபர் 24. அந்த நாள வந்திடுவதற்குள், நான்கு தலைவர்களும் விட்டுக்கொடுத்து மனம்விட்டுப்பேசி உடன்பாடு காண பாடுபட்டார்களாயின் உலகத சமூகம் வாழ்வதா அல்லது அழிவதா என்ற பிரச்சினையில் காணப்படும் கேள்விக்குறி களையப்பட்டு, சமாதான பங்கம் அழிந்தொழியுமென எதிர்பார்க்க இடமிருக்கிறது

சாதனைகள் !

"வெள்ளையர்கள் நூற்றாண்டுகளாக சாதிக்கமுடியாத காரியங்களை காங்கிரசார் குறுகிய காலத்தில் சாதித்திருக்கிறார்கள்"—சென்ற வாரம் சுற்றுப்பயணம் செய்த அத்தனை மந்திரிகளும இதே பாட்டைப் பாடித் திருக்கிறார்கள். காங்கிரஸ் சர்க்கார எவ்வளவு சாதி(?)த்திருக்கிறார்கள் என்பதை அளக்க புதிய அளவுகோல்கள் இன்னும் ( ) தயாராகவில்லையென்றாலும், வெள்ளையர் காலத்திலே நடக்காத, ஆனால் காங்கிரசார் காலத்திலே நடந்திருக்கிற சாதனைக்குரிய காரியங்(?)களில் ஒரு சில, கீழே தரப்பட்டிருக்கின்றன. படியுங்கள்; இந்தச் சாதனைகள் அனைத்தும், என்றைய தினம் சுதேசமித்திரன் பத்திரிகையில் மந்திரிகளின் சொற்பொழிவு வந்ததோ, அதே தினத்தன்று வெளிவந்தவைதான்; சிரிக்காதீர்கள்; சிந்தியுங்கள் !

- ★ கல்கத்தாவில் ஏராளமான பொய்ப் பட்டங்கள்,
- ★ பெண்ணைக் கடத்திச் செல்வதற்கு காங்கிரஸ் எம். எல். ஏ. உடந்தையாக இருந்தார்.
- ★ கணவனுக்கு, மனைவி எழுதிய கடிதத்தை தபால்காரர் அபகரித்தார்.
- ★ போலீஸ்காரர் வழிப்பறி செய்தார்.

இவையனைத்தும் காங்கிரசார் காலத்தில் நடைபெற்றவை. இப்படிப்பட்ட கீழ்த்தரமான எண்ணங்கள் சமுதாயத்தில் அரும்பு விட்டது யாருடைய காலத்தில் !

கொள்கைக் குமரி !

பெற்றவர்கள்--தன்னை இத்தனை நாள் போற்றிப் பாதுகாத்தவர்கள்--நிலாக் காட்டி, நெய்ச்சோறூட்டி, நித்திலமே, நீலமணியே என்றெல்லாம் வாய்குளிர பேசி வளர்த்தவர்கள்--எப்படித் துணிந்ததோ அவளுக்கு இப்படிப்பட்டவர்களைப் பிரிந்து போக.

பிரிந்தா போனாள்--இல்லையே பறந்துபோய்விட்டாள் ; பிறந்த மண்ணை மறந்து--பாசத்தை துறந்து அல்லவா பறந்து போய்விட்டாள்.

காதலா அதற்குக் காரணம் ? இல்லை ! இல்லை ! கொள்கை !

நிகழ்ச்சி இங்கு நடந்ததல்ல--நடந்த நிகழ்ச்சியும் அகநானூறு பாட்டின வகையைச் சேர்ந்ததல்ல. மலேயா நாட்டில் நடந்தது.

கூண்டிலிருந்து பறந்துபோன அந்தப் பறவை--மனிதப் பழமல்ல--பதினேழு வயதுப் பாவை ; கொள்கையைப்பற்றி ஆராய்ந்து, அதிலே அத்தனைப் பற்றுகொண்டு, அதற்காக எதையும் செய்யும் இதயத்தை பெறும் பருவம் அல்ல...அது--அதுவும் பெண்ணிற்கு ! ஆனாலும் விதிவிலக்காக அமைந்துள்ளாள அவள்.

திரு. லி-சுக்-சி (**Mr. Lee-Shook-Chee**) அவள் தந்தை--பெயர் இது. அவர் ஒரு வட்டிக்கடை முதலாளி--அந்த முறையிலே விளம்பரம் பெற்ற மனிதர் அவர். மலேயாவை தாயகமாகக் கொண்ட அவர் மகள்தான் ஓடிப்போனவள்--பெயர்--லி-க்வி-லியான் (**Lee-Kwee-Lian**) ஓடிப்போன மான்--பறந்துபோன குயில்...அவள்தான்...

அவள் கொள்கையோ...? செஞ்சீனாவில் குடியேறுவது. செஞ்சீனா...ஆமாம் ; அவள் இதயத்து இரத்தத்தில் இருந்த ஒவ்வொரு அணுவும் ஒலித்ததும்--செஞ்சீனாதான். எப்போதும் அதைப்பற்றிதான் பேச்சு. சீனத்தை உருவாக்கிய அந்த 'சிற்பர்களின்' படத்தை நாள கணக்கிலே பார்த்துக்கொண்டிருந்ததுண்டு. சிவப்புச்சீனா !--அவளைப் பொறுத்தவரை அது அவளின சொர்க்கம். அதனால் தான் அவள் ஒருநாள் வெளிக்கிளம்பிவிட்டாள்.

நடந்து, வேலிதாண்டிச் சென்று, சுற்றுமுற்றும் பார்த்து "வந்தீர்களா ? அத்தான் !..." என்று காதலனோடு புன்னை மரத்தடியிலே கட்டியணைத்து இன்பம் பெறுவதாக...எத்தனை நாளைக்குத்தான் கனவுகாண முடியும். என்றேனும் உள்ளங்கவர்ந்தவனோடு உரையாடவாவது துணிந்து ஏதோ 'சாக்குப் போக்கு பேசி' பின் சந்துமுனைகளிலே சந்தித்து, சுவை மிக, மிக, சொல்லாமலேயே காதலனோடு கம்பி நீட்டிடும் காரிகை போலத்தான், அவளும் நடந்து கொண்டாள். ஆம் ; அவள் வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டாள்.

அவர் ஒரு ஷைலக்--வட்டித் தொழிலில் மாத்திரமல்ல--மற்றவற்றிலும் ' தாயோ அன்பின் உள்ளம். வாழும் நாடோ 'டம்ளர்'' ஆட்சி செலுத்தியது ; செல்லநினைப்பதோ--சிகப்பு சீனாவிற்கு !

பாசகாய் !--சீனக்கலம், செஞ்சீனா செல்ல சில விநாடிகள் தான் இருக்கின்றன. அடங்கிக் கிடந்த நங்கூரம் ஆடத் தொடங்கும் நேரம் !

குமாரி லீ--கலத்திலே ஏறினாள்; சீனா செல்லும் நாற்பது சிறுவர்களும் அங்கு இருந்தனர். அவர்களில் ஒருத்தியாகி விட்டாள் !

கலத்தின் தளத்திலே நின்று--கனவு கண்டுகொண்டிருந்த 'லீ'யை யாரோ அழைத்தார்கள். திரும்பினாள்...பணியாள் ஒருத்தி--அவளை யாரோ...எதிர்பார்த்து வெளியில் நிற்பதாக கூறினாள்--அவசரமாக வெளியில் வந்தாள் ! திடுக்கிட்டாள்--அங்கே அவள் கண்ட காட்சி...

''சீனா செல்லும் பெண்ணே...என்ன செய்கிறேன் பார்'' என்று 'டல்லஸ்' துப்பாக்கியை அவள் முகத்திற்கெதிரே நீட்டியபடி கேட்டிருந்தால்கூட அஞ்சியிருக்கமாட்டாள் அவள். ஆனால் அங்கு நின்றது அவள் தந்தை !

அவர் விழிகளிலே துப்பாக்கி பொதிந்திருந்தது. அவரைக் கண்டவுடன் 'அப்பா' என்று ஓடிவரவில்லை 'லீ' மீண்டும் உள்ளே ஓடிட முயன்றாள். தந்தை விடுவாரா ?--மீண்டும் கூண்டுக்கிளியானாள்.

சில நாட்கள் கழித்து...மகளைக் காணோம் ! எங்கெங்கோ தேடினார் பயனில்லை. இருள்சூழ்ந்த உள்ளத்தோடு--கிடைப்பாளா 'லீ' என்ற நினைவோடு ஒரு நாள் கழிந்தது--பயன், இனி இல்லை என்று, நம்பிக்கை மறைந்துவந்த நேரத்தில்தான் ஒருவர் மூலமாக ஒளிவிடும் சேதி கிடைத்தது...

'பாசகாய் கப்பல்' நோக்கி விரைந்தார்--விரும்பியதை முடித்தார். ஆனால் அவளோ கலங்கினாள், கதறினாள் ! ஆனாலும் இழுத்துவந்துவிட்டார். இப்போது அவளுக்கு குடும்பத்தில் கட்டுக்காவல் அதிகமாம். இத்தனைக்கும் அவள் செய்த தவறு செஞ்சீனா செல்ல ஆசைப்பட்டதுதான் ! —**இசையமுது.**

எண்ணம்

கண்ணதாசன்

" வடநாட்டிலுள்ள, சிம்லாவில் உள்ளதுபோல் தென்னாட்டு மாநிலம் ஒன்றில் ஒரு ராஷ்ட்டிரபதி நிவாஸ் ஏற்படுத்த டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் உத்தேசித்திருக்கிறார். நாட்டின் எல்லாப் பகுதியுடனும் பரிச்சயம் கொள்ளவும், ஆண்டில் சில கிழமைகள் தென்னாட்டில் தங்கவும் அவர் விரும்புவதாகத் தெரியவருகிறது " இப்படி ஒரு பத்திரிகைச் செய்தி.

திராவிடர் இயக்கமென்றால் என்னவென்று கேட்டவர்கள்.—அப்படி ஒரு இயக்கம் தென்னாட்டில் இருப்பதாக எங்களுக்குத் தெரியாதே என்று அலட்சியம் செய்தவர்கள் இன்று இங்கே ' நிவாஸ் ' ஏற்படுத்தப் போகிறார்களாம் பரிச்சயம் கொள்ள ! பரிச்சயம் கொள்ள வேண்டிய நிலை தலைவர் பிரசாத்திற்கு எப்போது ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது ? டில்லியின் தலைமைப் பதவியை அப்படியே தென்னாடு ஏற்றுக்கொள்கிறது என்று நம்பியிருக்கிற 'பெரு'ந்தலைவர்களாயிற்றே 'புது டில்லிப்பூசாரிகள் ; பிறகு ஏன் எழைத் தென்னாட்டின் பரிச்சயம் தேவைப்படுகிறது அவர்களுக்கு ?

எப்படியெப்படிப் பேசவேண்டும், மக்களை எந்தமுறையில் கவரவேண்டும், என்று சொல்லிக்கொடுத்தபடியும், சற்று அதிகமாக நடித்தும் பேச கல்வியமைச்சர் சுப்ரமணியமிருக்கிறார் ; மின் வேகத்தில் சுற்றுப்பயணம் செய்ய மீஞ்சூர் பக்தவத்சலனார் இருக்கிறார்; ராஜா பட்டம் பெற்ற ராமநாதபுரத்தாரின் துணை இருக்கிறது; இவர்களையெல்லாம் மாதம் மும்முறை அழைத்து பரிச்சயம் கொள்ள வசதியிருக்கிறது பிரசாத்திற்கு ! அப்படியிருந்தும் ராசேந்திரரே இங்குவந்து தங்கி தென்னாட்டு மக்களோடு பரிச்சயம் கொள்ளவேண்டிய அவசியம் என்ன ? டில்லிக்குத்தான் தெரியாதே, தென்னாட்டு அரசியல் இயக்கம் பற்றி ! நேருவுக்கு, இதைப் பற்றி நினைக்கவே நேரமில்லையே ! கனவிலேகூட அவருக்கு கடல்கடந்த நாடுகளைப் பற்றித் தானே சிந்தனை! அப்படி இருந்தும், ஏன், வலியவந்து தென்னாட்டில் 'சிம்லா மாளிகை' எழுப்ப வேண்டும் !

கொஞ்ச நாட்களுக்கு பெங்களூர் தலைநகராக இருக்கவேண்டுமென்றார் அனந்தசயனமய்யங்கார்; பின்பு, அதே அனந்தசயனமய்யங்கார், 'ஆவடி'யிலே திராவிடநாடு பிரிவினையைக் கண்டித்துப் பேசினார். இப்போது ராசேந்திரரே, தென்னாட்டில் வாசம் செய்யப்போவதாக பேசப்படுகிறது. இங்கே இருப்பவர்கள், ஐந்தாண்டுத் திட்டத்தில் வடக்கு-தெற்கு, உயர்வு தாழ்வு காட்டவில்லை என அதிகாரப்பூர்வமாகப் பேசுகிறார்கள்; காமராசருக்கும் ஆச்சாரியாருக்கும் பின்னணியாக பெரியதொரு மக்கள் சக்தி இருப்பதாக அங்கே டில்லிக்குச் சபலம்! பிறகேன் இந்த நிலை ? காமராசர் பார்த்துக்கொள்ளமாட்டாரா ?

'சிம்லா மாளிகை' இங்கொன்று எழுப்புகிறார்களாம் ! அப்படியொரு, தீர்க்கமுடியாத 'வெறுப்பு' வளர்ந்திருக்குமானால், அந்த வெறுப்பை, கொஞ்சநாட்களுக்கு, சென்னைப் பகுதியில் தங்கிவிட்டால் நீக்கிவிட முடியுமா ?

அது மாற்ற முடியாத வெறுப்பாக இருந்தால் ? ஊறிப்போன இலட்சியதாகமாக இருந்தால்? இப்போதிருக்கிற அரசியல் சட்டமே, எங்களால் ஏற்கமுடியாதது என்று சொல்லக்கூடிய மனவளம்கொண்டிருந்தால் ? ராசேந்திரர் டில்லியைத் தூக்கி சென்னையில் வைத்துக்கொண்டு சென்னை தான் நிரந்தரத் தலைநகரமென்றால்கூட 'பரிச்சயம்' கொள்ளமுடியாதே அவர் விரும்பியபடி ! பரிச்சயம் கொள்கிறார்களாம். வீண்முயற்சி ! டில்லிக்காரர்கள் நினைக்கிறபடி திராவிடர் இயக்கத்தின் வளர்ச்சியை, 'சிம்லா மாளிகை' எழுப்புவதன்மூலம் தடுத்துவிட முடியாது. திராவிடர் இயக்கம், இந்திய அரசியல் சட்டத்தையே ஏற்றுக்கொள்ள மறுக்கிற இயக்கம்; வீம்புக்காக அல்ல; காலச்சாரத்தின் அடிப்படையில் வைத்துப் பார்க்கும்போது, இன்றைய அரசியல் சட்டமே தென்னாட்டுக் கலாச்சாரத்திற்கு முரண்பட்டதாக இருக்கிறது என்று மெய்ப்பித்துக்காட்ட வல்ல விடுதலை இயக்கம்; உலகில் எந்த நாட்டிலும் எந்த இயக்கமும் பெறமுடியாத வெற்றியைப் பெற்று, வளர்ந்துவரும் இயக்கத்தை, அதை நசுக்க எண்ணும் 'வரலாறு மறந்தவர்'கள் கொலு மண்டபத்தையும், குடியிருக்கும் இடத்தையும் மாற்றியா அழித்திட முடியும் ?

டில்லியிலிருந்து தேவகிரிக்கு தலைநகரை மாற்றிய துக்ளக் என்ன வானான் ? அவனது எண்ணம் ஈடேறிற்றா? சரித்திரம் அவனுக்கு என்ன பட்டத்தைச் சூட்டியது ? துக்ளக்கின் ஆத்திரமும் அவசர புத்தியும், கல்லூரி மாணவர்களின் தேர்வுக் கேள்வியாக அல்லவா அமைந்துவிட்டது. இத்தனைக்கும் துக்ளக் பொருளாதார மேதை; அவனாலேயே சந்திக்கமுடியாத 'இடமாற்ற நோக்கம்' இதுகளால்' சாதிக்கப்பெற்றுவிடப்போகிறதா ? அதுவும் சரித்திரத்தையே மாற்றிடப் பார்க்கும் ஏகாதிபத்திய எண்ணத்தில் !

அரச துரோகம் !

★

" நாங்கள் அதைச் செய்தோம், இதைச் செய்தோம் ; அதைக் கட்டினோம்; இதைக் கட்டினோம் " என்றெல்லாம் பெருமை அடித்துக் கொள்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள். ஒரே இடத்தில் இருக்கமுடியாத மந்திரிகள், வெளியூர் சுற்றுப் பயணம் செல்லுகின்ற போதெல்லாம் செய்திருக்கிற சாதனைகள் என்ற தலைப்பில் எதை எதையோ சொல்லுகிறார்கள்; இருக்கிறவர் அத்தனை பேரையும்-சாமரம் வீசுவோர் என்ற எண்ணத்தில். " காங்கிரஸ் ஒன்றினால்தான் நாட்டையாள முடியும்; ஏனெனில், காங்கிரசை வளர்த்தவர் உத்தமர் காந்தியாவார் " என்றுகூட, காந்தியார் மீது பாரத்தைப் போட்டுவிட்டு 'காரியத் தவறு'களை எத்தனையோ முறை மறைத்திருக்கிறார்கள். அப்படி மறைக்க முடியாமல் போனவைகளில் ஒன்றுதான் ரயில்வே லஞ்ச ஊழல்கள். ஆச்சார்ய கிருபளானி தலைமையில் சர்க்கார் நிறுவிய, லஞ்ச ஊழல் பரிசீலனைக் கமிட்டி தன்னுடைய முடிவான கருத்தை அணிமையில் தெரிவித்திருக்கிறது. கமிட்டியின் கருத்தடங்கிய அறிக்கை, காங்கிரசின் மகிமை பேசியோரின மனதிலே மருட்சியைத் தந்திருந்தாலும், கவலை, அவர்களது கண்களை இருளடையச் செய்திருந்தாலும் நாட்டின் நல்லவர்கள் விந்தையுற மாட்டார்கள். அத்துணை கேவலம்! அவ்வளவு சீர்கேடு ! கிருபளானியின் குழுவினர் சமர்ப்பித்திருக்கும் அறிக்கையை இரண்டு முறை படித்துப் பார்த்த பிறகு, நம் உள்ளத்தில் பிறக்கிற எண்ணம், 'ரயில்வே இலாகாக்கள் என்னதான் செய்தன?' என்ற வினாதான். இவைகளுக்குக் காரணம் ஆட்சிப் பொறுப் பேற்றிருப்போரின் திறமையின்மையோ ? அதிகாரிகளின் உள்ளங்களில் முளைத்துவிட்ட துரோகமோ தெரியவில்லை.

நாட்டின் பரப்பளவு குறைந்ததாக இருந்தால் நிர்வாகத்தில் குழப்பமோ, ஊழலோ ஏற்படாது' என்று மூத்தோர் முதுமொழி ஒன்று உண்டு—நாம் படித்திருக்கிறோம். ரயில்வேக்களில் லஞ்ச ஊழல் மலிந்ததற்கும் இதையே காரணமாகச் சொன்னால்கூட தவறில்லைதான். கண்காணிக்க முடியாதவாறு ரயில்வே இலாகாகளை பரப்பிக்கொண்டதன் விளைவுதான் இத்தகைய ஊழல்களுக்குக் காரணமென்றும் பரிசீலனைக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறது. இது ஒப்புக் கொள்ளக்கூடிய காரணம்தான். மேற்பார்க்க வகையற்றவர்கள், பெருமைக்காக நாட்டவரிடம் மலர்மாலை பெறுவதற்காக "ரயில்வே இலாகாவைவிஸ்தரிக்கச் செய்துவிட்டோம்" என்று சொன்னால் போதுமா? அதனால் வந்த வினைதானே இந்தக் கோளாறு!

இன்னொருவேடிக்கை! திட்டங்கள் தயாரிப்பதே, சிக்கனத்திற்கும் சுபிட்சத்திற்கும் தான். ஆனால், இந்த'புண்ணியவான்களின்'காலத்தில் திட்டங்கள் தயாரிக்கும் காலத்தில்தான் லஞ்சம் ஊற்றெடுத்து ஓடுகிறது. திட்டப் பணத்தில் ஒரு பகுதியை,கோட்டும்சூட்டும் போட்ட 'மனித முதலைகள்' விழுங்கி விடுகின்றன. இத்தனைக்கும் மத்திய சர்க்காரின் மேல்பார்வையில்உள்ள இலாகாகளின் ஊழியர்களுக்கு சம்பளம், செல்வாக்கு அதிகமென்பார்கள்; அவர்கள் செய்த தீவினைதான் இந்த நிலைக்கு வந்திருக்கிறது. ரயில்வே இலாகா புரிந்தது 'ராஜதுரோகம்' மட்டுமல்ல; பொது மக்கள் சொத்தின்மீதும் அசட்டையாக இருந்திருக்கிறார்கள். வெள்ளையர் காலத்திலே பொதுமக்கள் சாமான்களுக்கு நட்ட ஈடு தந்ததைப்போல ஏறத்தாழ நூறு மடங்கு அதிகமாக காங்கிரசார் காலத்தில் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பெரியதொரு மூலதனம் பெற்று இயங்கிவரும் ஒரு இலாகாவாக இருந்தாலும் இப்பேர்ப்பட்ட ஊழல்கள் மலிந்தால், வருவாயும் குறைந்து, மூலதனமும் அழிந்துபோகும் நிலை வந்துவிடக் கூடும். அரசியலார் கமிட்டியின் அறிக்கையைக் கவனித்து, வருமுன் காத்துக் கொள்ளவேண்டும். வந்தபின் காத்துக்கொள்ள முயன்றவர்களே மடிந்து மக்கிப்போயிருக்கிறார்கள். அந்தச் சரித்திரச் சம்பவங்கள் நேருவுக்குத் தெரியும். அவர் உலக சரித்திரம் எழுதியவர். பாண்டுங்கும், பனிப்பிரதேசமாம் ரஷயாவும் போய்வந்தால் போதுமா ?

★

அடுத்த இதழில் !

உலகப்பற்றியான் யார் ?

ஆண்டவனா ?

அரசனா ?

மோகம் பிறந்தது எப்போது?

"உலகப் பாட்டாளி வர்க்கமே! ஒன்று சேருங்கள். சர்வ ஜனப் போராட்டம் ஒன்று நடத்துவோம்" அவர்களுக்கே உரித்தான கலப்பட மொழியில் அவர்களுக்கே இருக்கிற பத்திரிகையில் அறிக்கை விடுக்கிருர்கள், தங்களைத் தவிர தங்களது இயக்கத்தைச் சார்ந்தவர்கள் நீங்கலாக மற்றவர்களெல்லாம் களஞ்சியத்திலிருந்து அப்போதைக்கப்போது எடுத்துக்கொள்கிறவர்கள் என்று எண்ணி.இவர்களுடைய அறிக்கையிலும் மயங்கிடும் தொழிலாளத்தோழர்கள்இன்னும் தமிழகத்தில் இருக்கத்தான் செய்கிருர்கள். என்செய்வோம்?

தென்னுட்டைப் பொறுத்த வரையில் கம்யூனிஸ்ட் கட்சியின் பலம் நாடறிந்தது. இந்தியத் துணைக்கண்டத்தின் வேறு பல பகுதிகளில் சென்ற பொதுத் தேர்தலில் பொதுவுடைமைத் தோழர்கள் வெற்றிபெற்றதைக் காட்டிலும் திராவிட நாட்டில் தான் அவர்களுக்கு அதிக ஸ்தானம் கிடைத்திருக்கிறது. அப்படியென்றுல் தென்னுட்டில் பொதுவுடைமைக்கட்சி வலுப்பெற்றுத் தானே இருக்கிறது என்று சிலர் கேட்கக்கூடும். சென்ற பொதுத் தேர்தலில் பொதுவுடைமைக் கட்சி தென்னுட்டில் ஓரளவுவெற்றி பெற்றதற்கு காரணமே "வெறும் வாயை மெல்வதற்கு அவல் வாயை மெல்லுவது உசிதம்" என்று மக்கள் கருதியதால்தான். காங்கிரஸின் போக்கை வெறுத்தவர்கள், ஆட்சிபீடம் ஏறிய பின்பு போராட்ட காலத்தில் வாக்களித்த வாக்குறுதிகளை காற்றிலே பறக்கவிட்ட "தேசிய திருவாளர்"களின் மிதமிஞ்சிய போக்கை நாட்டோருக்கு எடுத்துக்காட்ட ஆசைப்பட்டவர்கள் காங்கிரஸை மண்கவ்வச் செய்ய விரும்பினுர்கள். அவ்வாறு வீழ்த்தப்பட்டால் காங்கிரஸார் இருந்த ஆசனத்தில் யாரை அமர்த்துவது என்ற கேள்விக்குறி முளைத்தது. சுயேச்சைகளில் ஒருசிலர் உதிரிகளெனத் தள்ளப்பட்டார்கள். குடிசைப்பெட்டிக்காரர்கள் (பிரஜா சோஷலிஸ்ட்) காங்கிரஸின் மறுபதிப்பு என்று ஒதுக்கப்பட்டார்கள். திராவிட கழகமும் திராவிட முன்னேற்ற கழகமும் தேர்தலில் பங்கேற்கவில்லை. மீதமிருந்த கட்சி "கொள்கையுடையது என்று அந்த நேரத்தில் தவறுதலாக கருதப்பட்டுவிட்ட கட்சி பொதுவுடைமைக் கட்சி. திராவிட முன்னேற்ற கழகத்தின் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டவர்கள் நின்ற தொகுதிகள் நீங்கலாக மற்ற தொகுதிகளில் காங்கிரஸிற்கு எதிராக நின்ற பொதுவுடைமைக்கட்சி தோழர்களுக்குத்தான் முற்போக்கு எண்ணம் கொண்டோரின் வாக்குகள் விழுந்தன. பெரியார் இராமசாமியும் கைகொடுத்தார். இவைகளின்கூட்டுத் தொகையால்தான் சென்னை சட்டசபையில் ராமமூர்த்தி எதிர்க் கட்சி தலைவராக வரமுடிந்தது. இந்தவெற்றிக் காதயைஎப்படிக் கிடைத்தது என்று உணராதவர்கள் தான்-மீண்டும் நினைத்துப் பார்க்காதவர்கள்தான்தென்னுட்டில்தங்களுக்குஅதிகப்படியான செல்வாக்கு இருக்கிறதாக நினைத்துக் கொண்டிருக்கிருர்கள். அந்தோ பரிதாபம்! மக்களால் நம்பப்பட்டவர்கள் குறுகிய காலத்திலே சாயம்போன கந்தல் துணியாக ஆனது பற்றி நமக்கு மிக்க மகிழ்ச்சிதான். ஆனுல் காங்கிரஸை நேரடியாக எதிர்ப்பதாகச் சொல்லி மக்கள் முன்னிலையில் தைரியமாகப்போவதற்கு ஏற்பட்ட வாய்ப்பை நழுவ விட்டவர்கள் இன்னும் எதிர்காலத்தை நம்பி நாக்கைத் தட்டிக்கொண்டிருப்பது தான் நமக்கு விந்தையாக இருக்கிறது. பொதுமக்கள் என்ன அவ்வளவு சிந்தனு சக்தியற்றவர்களா? ஒரு காலத்தில் வேண்டுமானுல் பொது மக்கள் செம்மறியாட்டுக் கூட்டமாக இருந்தார்கள். அந்தக் காலமல்ல இது: யார், யாரை, ஏன், எப்படி, என்று வினுக்களை அடுக்கிக் கொண்டுபோகிற காலமிது.

இந்த முன்னுரையை இவ்வளவு விளக்கமாக எழுதுவதற்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸின் நேரடி எதிரி நாங்கள் தான் என்று சொல்லிக் கொண்டவர்கள், பண்டிட் ஜவகர்லால் நேரு நிர்வாகத்திற்குத்தகுதியற்றவர்என்று பறையடித்தவர்கள் அண்மையிலே தலைகுப்புற கவிழ்ந்திருக்கிருர்கள். மோதிலால் மைந்தர் மீது கம்யூனிஸ்ட் கட்சிக்குப் புதிய மோகம் ஏற்பட்டதின் காரணத்தை நாங்கள் அறிவோம்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் தீர்மானம் பத்திரிகைகளிலே வெளியாகி இருக்கிறது. இதுகாறும் பொது மக்களை நம்பும்படி செய்துவந்த போலிவேடமும் கலைக்கப்பட்டிருக்கிறது. யார்? யாருக்கு? எங்கே? எப்போது? என்ன பேச்சு நடந்ததோ தெரியவில்லை. (தென்னுட்டு ஜீவாக்களுக்குக் கூட தெரியாது) நேருவின் போக்கை ஒருமனதுடன் ஆதரிக்கிருர்கள் மத்திய கமிட்டி கூட்டத்தில். "இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கையும் முற்போக்குத்தன்மையும் ஜனநாயகத்தன்மையும் ஏகாதிபத்திய எதிர்ப்பும் ஆசிய ஒருமைப்பாடும் ஏற்பட்டிருப்பதற்கு நேருஜியின் முயற்சி முக்கிய காரணம்." யாரோ வழிப்போக்கனுடைய பேச்சல்ல இது. பொதுவுடைமைக் கட்சியின் முதுகெலும்பு என்று கருதப்படுகிற மத்திய கமிட்டி அதிகாரப் பூர்வமாக நிறைவேற்றிய தீர்மானம். முஷ்டியை தூக்கித்தூக்கி பழக்கப்பட்ட பொதுவுடமைக் கட்சியா முதலாளி நேருவுக்கு இப்படி 'ஜே' போடுகிறது. நாம் சொல்லவில்லை. இந்தச்செய்தியை சாதகப்படுத்திக் கொண்ட தினமணி, ஜூலை 5-ம் தேதி இதழில் முதல் பக்கத்தில் பிரசுரித்திருக்கிறது.

நிர்வாகத் திறமையற்றவர் நேரு என்று தென்னுட்டு பொதுவுடமைக்கட்சித்தலைவர்கள் தினம் தினம் சொல்லி வருகிருர்கள்; எழுதி வருகிருர்கள், ஆனுல் வட நாட்டில் கூடிய பொதுவுடமைக் கட்சியின் மத்திய கமிட்டிக் கூட்டம் நேருவின் வெளிநாட்டுக் கொள்கையை மனப்பூர்வமாக ஆதரித்து இருக்கிறது. நேருதான் காங்கிரஸ்! காங்கிரஸ்தான் நேரு! என்று வான்முட்டப்பேசப்படுகிற இந்தக்காலத்தில் நேருவை ஆதரித்த பொதுவுடமைக் கட்சிக்கும் காங்கிரசிற்கும் என்ன வித்தியாசம்? இந்த செப்படி வித்தைக்காரர்களை மக்கள்தான் எப்படி நம்புவார்கள். ஒருவேளை புல்கானின் விருந்தினராக நேரு போயிருக்கிருர் என்பதற்கு தங்களின் உள்ளன்பைக்காட்ட அரங்கமேறிய ஒற்றையங்க நாடகமோ இது தெரியவில்லை! இது நேரு ரஷ்யாவில் இருக்கிற நேரத்தில் நிறைவேறிய தீர்மானம். எனவேதான் எங்களுக்கு அந்த எண்ணம் தோன்றுகிறது.

—முடிமன்னன்

திரும்பிப் பார்ப்போம்!

விரும்பியதைச் செய்திட விஷவித்துத் தூவிய வேதியர் ஆச்சாரியாரை வெற்றி கொண்டோம். புதிய கல்வித்திட்டம் ஒழித்தோம்.

★

"கல்லக்குடி-எங்கள் பெயர். காசு தேடிவந்த டால்மியாவுக்கு இங்கென்ன 'புரம்'?"- இளைஞர் படை இனமுழக்கம் செய்தது. மீண்டும் கல்லக்குடி காட்சி தருகிறது.

★

உலகம் திகைத்தது; நாகாக்கா நேருவின் துடுக்கடக்க ஊரெல்லாம் ரயில் நிறுத்தினேம். மானம் காத்தோம்; மறவர் குலம் நாங்களென முரசறைந்தோம்.

ஜூலை 15! விருதுபெற்ற அந்தக் களங்களை திம்பிப் பார்ப்போம்.

ஆணவம்!

பத்தாம் முறையாகப் படையெடுத்துப் பின்னர் எப்படியோ பி.ஏ. பட்டம் பெற்றுவிட்டு இரண்டாண்டுகளாக வேலையில்லா பட்டதாரிகளின் கழக கவுரவக் காரியதரிசியாக வேலை பார்த்து வரும் காமேசுவரனுக்கும் மாமேதாவி என்று தன்னை நினைத்துக்கொண்டிருக்கும் செருக்குமிக்க அவன் தந்தைக்கும் ஓர்நாள் கீழ்க்கண்ட வகையில் உரையாடல் நடைபெற்றது.

மேதாவி: காமு!

காமேசு: அப்பா!

மேதாவி: சென்னைக் கவர்னருக்குச் சம்பளம் எவ்வளவு?

காமேசு: என்னமோ ஆயிரம் ஆயிரமாய்த் தருகிருர்கள்.

மேதாவி: எனக்கு அரை ஆயிரம் மாதச் சம்பளமாகத் தந்தால் போதும்; கவர்னர் வேலையைத்தடையின்றி ஏற்றுக்கொண்டு திறம்பட பணியாற்றுவேன் என்று ஜனுதிபதிக்கு இன்றே விண்ணப்பம் எழுது.

காமேசு: அப்படியே செய்கிறேன், அப்பா!



அதோ! தமிழ்மக்களே! கேளுங்கள்! வீரரசம் ததும்பும் செய்தி! கேளுங்கள்! கேட்ட உடனே உங்கள் மெய்சிலிர்க்கிறதா என்று பாருங்கள்! அவ்வளவு மகா வீரரசம்! அணுகுண்டுவுக்கு வெங்காய வெடி சவால் விட்டது! அரேபியக் குதிரைக்கு 'ஆள் ஏறுக் குதிரை' ('கழுதை' எனப் பொருள் கொண்டால் நான் பொறுப்பல்ல!) சவால் விட்டது! யானைக்கு மாளிகைக் காவலன் (நாயென்ற பொருளைத் தள்ளுக!) சவால் விட்டான்! தி. மு. கழகத்திற்கு சிவஞானம் சவால் விட்டார்! அடி சக்கை! தலைகால் தெரியாததமிழரின் "மாப்பண்பே" பண்பு! யாருமில்லாத இடத்திலே-சுமார் நூறு பேர் கூடியிருந்த மாநாட்டிலே சவால் விடுகிற பண்பு யாருக்கு வரும்! புறநானூறெல்லாம் என்ன செய்ய!

" கம்பனைப் பற்றிப் பேசவா! சவால்!" என்றாராம் சிவஞானம்! உண்மையிலேயே 'சவால்' என்பதன் பொருளைத் தெரிந்து சொன்னாரோ, அல்லது குதிரைவால், குரங்குவால், நாய்வால் என்பது போல அதுவும் ஒருவால் என எண்ணிக்கொண்டு சொன்னாரோ தெரியவில்லை! உண்மையிலேயே 'சவால்' என்றால் நமக்கு மிக்க மகிழ்ச்சி! அதோடு ஆச்சரியமும் கூட! சேதுப் பிள்ளை எனப்படுபவர்-வேலும் வில்லும் கையில் தூக்கி ஊரும் பேரும் உதட்டில் தேக்கி சீரும் சிறப்புமாக செந்தமிழ் பேசும் சிவநேசச்செல்வர் - "தோற்றேன் தோற்றேன்" என ஓடிய இடத்தில் வேல் என்றால் வேலாமரம் என்று மட்டுமே தெரிந்தவர், வில் என்றால் நெல்லுக்குத் தம்பி என்று கருதுபவர், ஊரும் பேரும் தெரியாத அனுமதேயர் சவால் விடுகிறார் என்றால் ஆச்சரியம் ஏற்படாமலா இருக்கும்! (அனுமதேயர் என்றால் யாரும் வேறு பொருள் கொள்ள வேண்டாம். பொருள் இதுதான். அனுமம் என்கிற தேசத்தைச் சேர்ந்தவர்!)

இந்த 'சவால்' செய்தியைப் படித்ததுமே எனக்கு ஒரே ஆச்சரியம்! ஏனென்றால், அதற்குச் சில தினங்களுக்கு முன்பு - மூன்று தினங்களுக்கு முன்பு தான் ஒன்று நடந்தது. அதாவது, வண்ணாரப்பேட்டை திருவள்ளுவர் முன்னணிக் கழகத்தார் ஒரு விழா நடத்தினார்கள். ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ, தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த 'வசனகவி', கண்ணதாசன் ஆகிய மூவரையும் மற்றும் சில நண்பர்களையும் அந்த விழாக் குழுவினர் கேட்டு, சம்மதம் பெற்று நோட்டீஸ் போட்டிருந்தனர். 'வசனகவி' கடைசி நேரத்தில் 'மனதிலே சிதபேதி' ஏற்பட்டு நின்றுவிட்டது! வரவில்லை! காங்கிரஸ் எம். எல். ஏ. வந்தார். அவர் முன்னுரையில் பரிதாபமாகப் பேசி முடித்தார். பிறகு திராவிட கழகத் தோழர் ஜீவரத்தினம் அழகாகப் பேசிச் சிரிக்க வைத்தார்-பிறகு தோழர் வளையாபதி முத்துக்கிருஷ்ணன் பேசும்போது "பெரியார் தான் திருக்குறளை எடுத்துக் காட்டியவர்!" என்று கூறினார். உடனே ஒரு 'ரெக்ருட்' எழுந்து, வசனகவிக்குப் பதிலாகத் தான்பேசுவதாகவந்தது அதுவும் 'தமிழரசு'தானாம்! (அடே! ஒரு மெம்பர் இருக்கிறாரே என்று ஆச்சரியப்படாதீர்கள்!) அது சிவஞானத்தைவிட மோசமாக உளறிற்று! உடனே, கூட்டம் அதைக் கைதட்டி உட்காரவைத்தது. உடனே கண்ணதாசன் கூட்டத்தை அமைதிப்படுத்தி மீண்டும் அந்தப் பையனைப் பேசச் செய்தார். சில காங்கிரஸ் 'சம்பள ஊழியர்கள்' வந்து தலைவரை இறக்கி அழைத்துக் கொண்டு போய்விட்டார்கள்! கடைசியில் பெருங்கூட்டத்தின் ஆரவாரத்தோடு கண்ணதாசன் பேச ஆரம்பித்தார்.

" நீ இளைஞன் தம்பி! அனுபவமில்லாதவன். உன் தலைவன் என்று பைத்தியக்காரத்தனமாக நீகருதிக் கொண்டிருக்கிறாயே அந்தக் கோமாளியையே அழைத்துவா!" "எது பற்றிப் பேசுவோம் கேட்டுவா; இங்கல்ல; எங்கு வேண்டுமானாலும் இதுபற்றியல்ல; வேறு எதுபற்றி வேண்டுமானாலும் பேசுவோம்!" என்று பெருத்த கையொலியினிடைய கூறினார். இது பற்றி பத்திரிகைகளில் வராததால் முந்திக்கொண்டு, 'தற்குறித்தலைவர்' சவால் விடுகிறார்!

யோக்கியதை சிறிதுமில்லாமல், சில மரமண்டைகள் - சுமார் நாலைந்து-தாளம் போடுவதாலேயே சிவஞானம் தலைவராக முடிந்தது. ஆனால், இலக்கியத்திலே அது நடக்காது. வாய்கிழியக் கத்துவதனால் நிறைய இலக்கியம் படித்தவனை விட முடியாது! காலித்தனமான பேச்சு, புலமையாகாது! நாகரீகம் சிறிதுமில்லாத மேடையில் ஏறி, "உன் அப்பன் பெயரென்ன!" என்று கேட்பவன், காலித்தலைவன் ஆகமுடியுமே தவிர, கட்சித் தலைவனாக முடியாது! அதிருக்கட்டும் சவாலுக்கு வருவோம்.

எங்கு? எப்பொழுது? எது பற்றி?

தோழரே! சிவஞான வீரரே! நீர் தமிழராயிருந்தால் - உடனே இடம் குறிப்பிடும்! தேதி குறிப்பிடும்! கம்பனைப் பற்றியே பேசுவோம்! உடனே! உடனே! உடனே!

" உன்னோடென்ன நான் பேசுவதா!" என்று ஒருவரியில் சொல்வது, "மீசையில் மண் ஒட்டவில்லை" என்பதற்கு அடையாளமாகும்! வாரும் பேசிப் பார்ப்போம்! நல்ல விளம்பரம் செய்து, நாடு முழுவதையும் கூட்டுவோம். கடற்கரையில் மேடை அமைப்போம்-'கம்பன் என் பாட்டன்' என்பது பற்றி நீர் பேசும்-"கம்பனே வீடணன்" என்பது பற்றி நான் பேசுகிறேன் 'வோட்' எடுப்போம். ஊராரைக் கேட்போம் சரியா? சம்மதமா?

அண்ணாவோடு நீர் பேச வேண்டியதில்லை. காரணம், உமக்குத் தெரிந்ததைக் காட்டிலும் கோடி மடங்கு அதிகமாகத் தெரிந்த நாவலரும் சேதுப்பிள்ளையும் குதிகால் பிடரியில்பட ஓடினார்கள் - அண்ணாவிடம் தோற்று! ஆகவே, அவ்வளவு தலைசிறந்த அறிஞரோடு விவாதிக்க உமக்குத் தகுதியில்லை. கட்சியிலே நான் ஒரு சாதாரணத் தொண்டர் - என்னோடு பேசும்! நீர்வென்றால்-உமக்குப் பாதபூஜை செய்கிறேன். என்ன சம்மதமா!

தமிழரசுக் கழகத் தோழர்களுக்கு (அப்படி யாராவது இருந்தால் அவர்களுக்கு) ஒரு வார்த்தை! உங்கள் தலைவரைத் தூண்டுங்கள்! "பாருங்கள்! எங்கள் மானம் பறிபோகிறது! இந்தப் பொடியன் கேட்பது-நீங்கள் மௌனம் சாதிப்பதா? உங்களால் முடியாதா? என்னென்னவோ - சிலப்பதிகாரம் அது இது என்றெல்லாம் முழங்குகிறீர்களே, இது உங்களுக்கு வராதா! யாருமில்லாத இடத்திலே போடு போடென்று போடுகிறீர்களே, சம்மதியுங்கள்! என்று தூண்டுங்கள்! நாளையே கூட்டம்! நிற்க!

இன்னொரு வேடிக்கை, 'நூறு பேர் மாநாட்டில் சிவஞானம் ஒரு 'பாயிண்'டையும் எடுத்துவிளாசினாராம். அதாவது, திராவிட இயக்கத் தலைவர்கள் எத்தகைய இழிசெயலைச் செய்தாவது பணம்சேர்க்க நினைக்கிறார்களாம். அடடா! பணம் துறந்த பத்தினி இவர். இவர் கதையைச் சொன்னால் "செப்டிக்" டாங்கைத் திறந்துவிட்டதுபோல் எட்டு ஊருக்கு நாறும். எவ்வளவு சுலபமாக திராவிட இயக்கத்தலைவர்களைக் குற்றம் சாட்டிவிட்டார் பாருங்களேன். திராவிட இயக்கத்தலைவர்கள், எந்தக் கார்ப்பரேஷன் பள்ளிகளில், எந்தப் புத்தகத்தை வைப்பதற்கு, எந்தப் பதிப்பாளரிடம் லஞ்சம் பெற்றார்களோ தெரியவில்லை. (சிவஞானம் கூர்ந்து யோசனை செய்வாரா வரவு செலவுகளை எண்ணிப் பார்ப்பாரா?) போன தேர்தலில், காங்கிரசை ஆதரித்துப்பேச, ஆங்காங்கே நின்ற அபேட்சகர்களிடம் கூலி வாங்கியவர்கள் யாரென்பதும் புரியவில்லை. இதுபோல் எடுத்துச் சொன்னால் ஏழாயிரம்! பதினாயிரம்! வந்திருக்கிறவனெல்லாம், நொந்துபோனவன் என்ற தைரியத்திலே கொட்டியளந்திருக்கிறார் கோமாளித் தமிழர்.

இன்னொரு பெரிய வேடிக்கை! சமீபத்தில் சிவஞானமும், அவரைச் சேர்ந்தசில சில்லறைகளும், அவரது பிறந்த நாளைக் கொண்டாடினர். அறிஞர்கள், படித்தவர்கள், அரசியல் தலைவர்கள், யோக்கியதையுள்ளவர்கள் ஆகியோரது பிறந்த நாளைக் கொண்டாடுவதுதான் வழக்கம். இவரது பிறந்த நாளை எப்படிக் கொண்டாடினார்களோ, தெரியவில்லை!

இலக்கியப் போட்டி

முடிவு தேதி 30-7-55

◉

திராவிட எழுத்தாளர்களே! இன்னும் சில தினங்களுக்குள் உங்கள் திறன் காட்டி, பரிசில் பெற்று, புகழ் மணங்கொள்க!

சாகசம்

காதலன் காதலியை முத்தமிட அவளருகில் வருகிறான்.

காதலி: " நீங்கள் எனக்கு முத்தம் தரவேண்டியதில்லை. அம்மாவைக் கூப்பிட்டு விடுவேன்."

காதலன்: " அம்மாவிற்குப் பதிலாக உன் அப்பாவைத் தான் கூப்பிட்டுப்பாரேன். எனக்கு எவ்வித பயமுமில்லை."

காதலி: "அம்மாதான் பீரங்கிச் செவிடு." -க

◉

யுக்தி

புதுமணத்தம்பதிகள் சிலமணி நேரமாகிலும் தனிமையில் இன்பந்துய்க்க அவாவுற்றனர். அதற்கு அவ்இளங்கணவன் ஒரு யுக்தியைக் கையாண்டான்.

கணவன்: கண்ணே, இன்றிரவும் சிலமணி நேரம் நம் விருப்பம்போல்மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

மனைவி: உண்மையாகவா?

கணவன்: ஆம். அதற்காகத்தான் இன்றிரவு நாடகத்திற்கு மூன்று நுழைவுச்சீட்டுகள் வாங்கி வந்துள்ளேன்.

மனைவி: நம்மிருவருக்கு மூன்று எதற்காக?

கணவன். உன் அப்பா, அம்மா, தம்பி - ஆக மூவருக்கு மூன்று! -க



ராஜதண்டனை - ஒரு விளக்கம்

'ராஜதண்டனை' என்கிற தலைப்புப் பற்றி நண்பர்கள் பலர் கடிதங்கள் எழுதியுள்ளார்கள். "'ஜ' என்னும் வட மொழி எழுத்தை-தனித்தமிழ் விரும்பும் நீங்கள் சேர்க்கலாமா?" என்று உருக்கமாகக் கேட்டுள்ளனர். பனைவடலிசத்திரம் நண்பர்கள் கோ. சி. பாண்டியன், நீ. தி. திருமலைசாமி, பெ. வெள்ளத்துரைப் பாண்டியன், த. வையலிங்கம் பூ. சின்னத்தம்பி, முத்துசாமி, பழனிக்குமாரன்,பெருமாள் முதலியோரும் சேலத்தையடுத்த கோண்டலாம்பட்டி நண்பர்கள் அ. பாலசுப்ரமணியன், க. காளிங்கன், மு. தங்கராசு முதலியோரும் இதுபற்றி வருத்த-கோபப்பட்டு எழுதியுள்ளார்கள். [பரமக்குடி எஸ்.கமலாவதி, எஸ். பிரகாசம், என். மதியரசு முதலியோரும்கூட.]

சாதாரணமாக, 'மணிப்பிரவாள'த் தலைப்பாகவே நான் அந்தத் தலைப்பைச் சூட்டினேன். 'அம்பிகாபதி' என்ற தலைப்பிலேயே எழுதலாமெனில் அதே தலைப்பில் பல புத்தகங்கள் வெளிவந்துள்ளன. எனவே, பொதுத் தலைப்பாக இருக்கட்டும் என்றே இதனைச் சூட்டினேன். எல்லா நண்பர்களுமே இந்த மொத்தத் தலைப்பைக் குறைகூறவில்லை. ராசதண்டனை-அரச தண்டனை-இராச தண்டனை-இப்படித் திருத்திச் சூட்டியிருக்கலாம் என்றே எழுதுகிறார்கள். பொதுவாகவே, வட மொழியோடு இயங்கிவரும் ஒரு தொடருக்கு, தமிழ்ச்சட்டைபோடுவதில் எனக்கு எப்போதுமே உடன்பாடில்லை. அது தனித்தமிழ்ப் 'பிறப்பாக' இருக்கவேண்டும். கிருஷ்ணனைக் கண்ணனாக்கலாம் கிருட்டிணன் ஆக்கவேண்டாம் என்று நினைப்பவன் நான். அதனால்தான் முழுத்தொடராக, ராஜ தண்டனை, தெய்வ தண்டனை என்று உள்ளவற்றை, 'வழக்குப் புகழ்' இருப்பதால் போடலாம் என்று கருதினேன். ஆனாலும், அதற்காக அது சரிதான் என்று வாதிடவில்லை. இதனைப் புத்தக வடிவில் ஆக்கும்போது, வெறும் தண்டனை என்றே சூட்டுவேன் எனக் கூறிக் கொள்கிறேன்.

அடுத்து, ஒரு நண்பர், நாடகம், படிக்கக்கூடியதாயிருப்பதாகவும், நடிப்பதற்கு, (நாடகத்தில்) நான் கூறும் காட்சியமைப்புகள் பொருந்தி வராதென்றும், உதாரணமாக முதற் களத்தைக் குறிப்பிட்டு சாளரங்களும் தெருவும் தேர் போவதும் எப்படி எனவும் கேட்டுள்ளார். இது முழுதாக முடிந்ததும் நடிக்கும் நாடகம் என்று தலைப்பிட்டு எந்தெந்தக் காட்சிகள் இல்லாமல் நடிக்கலாம் என்பது பற்றியும் எந்தெந்தக் காட்சிகளை எப்படி எப்படி மாற்றிக்கொள்ளலாம் என்பது பற்றியும் ஒரு விளக்கம்-புத்தகத்தில்-தருவேன். அது கச்சிதமான அளவில் பயன்படும் என அவருக்குக் கூறிக்கொள்கிறேன்.

பொதுவாக-நாடகம் பற்றி கருத்துரை கூறும் நண்பர்கள், இதுபோல், குறை கண்டு கூறவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். புகழ்ச்சியுரை-அதுதான் எப்போதும் இருக்கிறதே!

—கண்ணதாசன்

அம் : வணக்கம் தாத்தா!

ஏகம் : (சிரித்து) வாழ்க!

[ஏகம்பவாணர் திரும்பி, அவையில் எல்லோர்க்கும் வணக்கம் செலுத்திவிட்டு அமர்கிறார். அருகிலிருக்கும் கம்பன், சிரித்த வாறு.]

கம் : காலையிலேயே வந்திருக்கலாமே!

ஏக : இயலவில்லை...எப்படியும் வர எண்ணி இப்போது வந்தேன்!

[சடையப்பரைப் பார்த்து.]

அடடா! வள்ளலார் வரவு எப்போது!

[சிரித்து]

சடை : சற்றுமுன்புதான்! சடையப்பன் வரவு! வள்ளலார் வரவல்ல!

ஏக : நீர் மறுத்தாலும் ஊர் மறுக்குமா! நலந்தானே!

சடை : நலமே!

[அமைச்சர் பவணந்தி எழுந்து நின்று, அம்பிகாபதியை அழைத்தல். அம்பிகாபதி அருகில் செல்லல். அமைச்சர் ஒரு ஏடு தந்து, அதில் கைச்சான்று பெறல். "வாழிய நாடு! வாழிய தமிழ்!" என முழங்குதல். அவையில் முழக்கம். அம்பிகாபதி எல்லோரிடமும் வாழ்த்துப் பெறுதல். கூத்தனும் வாழ்த்துதல்.]

—காட்சி முடிவு—

களம் 10

காட்சி : 10

இடம் : அந்தப்புரம்--உப்பரிகை.

நேரம் : மாலை.

[அமராவதி, அழகாக அலங்கரித்துக்கொண்டு, ஒரு ஏட்டை எடுத்துப் புரட்டியபடி அமர்ந்திருக்கிறாள். மெல்லிய குரலில் பாடுகிறாள்.]

அமரா : பாட்டு :

வெள்ளி நிலாமாடத்தில், மென்பூந்தென்றல்
விளையாடும் நேரத்தில், அழகுமுற்றும்
அள்ளிவரும் பேடை, தன் ஆளனோடும்
அறிந்திருந்த கலைகளிலே ஒன்று சொல்வேன்!
செங்கனிவாய் ஓரத்தில் சிறிய மின்னல்
சிதறிவரக் காண்கின்ற தடந்தோள் அண்ணல்
அங்கொரு பொன் எடுக்கின்றான்; அவளும்மெல்ல
அடுத்தொருபொன் கொடுக்கின்றாள்; அதுதான் என்ன!

[தோழி மல்லிகை, இதனைக் கேட்டுக்கொண்டே வந்தபடி...]

மல் : அது என்ன! அதுதான் முத்தம்! இல்லையா?

அமரா : (சிரித்தபடி) எனக்கென்ன தெரியும்! உனக்குத் தெரியும்! உம்...

மல் : போதும் போதும். கதை தொடர்ந்தால் காலம் போதாது!...உம்...இதைக் கேள். இன்று நகரிலே ஒரு பெரிய வேடிக்கை...

அமரா : என்ன அது!

மல் : கணியூர்ச்சாத்தனார் மகள் கமலவல்லி, ஆயத்தார் பிள்ளையைக் காதலித்தாளாம்...

அமரா : ஏன் காதலித்தாளாம்?

மல் : ஏனென்றால்...(திடுக்கிட்டு-சமாளித்து) என்னடி கேள்வி இது! 'காதலித்தாளாம்' என்றால், எப்பொழுது என்று கேட்பார்களே தவிர ஏன் என்று கேட்கமாட்டார்கள் யாரும்!

அமரா : நான் கேட்கிறேன்--ஏன் காதலித்தாளாம்?

மல் : (சற்றுக் கோபத்தோடு) ஏன் காதலித்தாளாம்! கொழுப்பு! திமிர்!

அமரா : ஆமாம்! அதுதான்! சந்தேகமே இல்லை!...அடி மல்லிகா! கண்ணொடு கண் பார்ப்பதும்...காதல் எண்ணம் சேர்ப்பதும்...உன்னைப், பிரியேன் நானென்று இவனும், பொன்னைப் பிரியுமோ ஒளி என்று அவளும்...

பித்துப் பிடித்து பிதற்றுவதும்...காவியத்திலிருந்து வாழ்க்கைக்குத் தாவிய அர்த்தமற்ற விளையாட்டுக்கள்! ஆணுக்கொரு பெண்...இது உலக நீதி! அதைத் தாய் தந்தை தேடித் தருவதுதான் முறை! நான்தான் கேட்கிறேன்...அப்படியென்ன நம்மை மீறி ஒரு சக்தி நம் மனதை ஆட்டிவைப்பது!

மல் : நிச்சயமாகக் கூடாது!

[ஆச்சரியம்]

அமரா : நீயும் ஒப்புக்கொள்கிருயா!

மல் : ஒப்புக்கொள்கிறேன்--நம்மை மீறி ஒரு சக்தி நம் மனதை ஆட்டிவைக்கக் கூடாது! கூடவே கூடாது! ஆனால் ஆண்டாண்டு காலமாக நடந்து வருகிறதே!

அமரா : அத்தனை பேருக்கும் பலங்கெட்ட மனது! அதனால் தான் நடந்துவருகிறது!

மல் : அது என்னவோ! கதையைக் கேள். கமலவல்லி, தன் காதலனை உயிராகக் கருதி அன்பு செலுத்தினளாம்...

கண்ணதாசன்

ஆனால் சாத்தனார், தன் மகளை ஆயத்தார் பிள்ளைக்குக் கொடுக்க மறுத்துவிட்டாராம்.

அமரா : பிறகு?

மல் : ஆயத்தார் பிள்ளை இன்று மடலூர்ந்து வந்தான்...

அமரா : பித்தம் பிடித்தவன்...

மல் : சத்தம் போட்டுச் சொல்லாதே! பித்தம் உனக்கென்று தீர்மானித்து விடுவார்கள்.

அமரா : மல்லிகா! என்னை நீ அறிவாய்--எதிலும், நான் சொல்வது...என் வாழ்க்கையின் குறிக்கோளாகவே இருக்கும்!

மல் : சரி! போதும்! எதாவதொரு தடந்தோள் வடிவம், கண்களைத் தட்டிவிட்டுப் போகும் வரை, சில பெண்கள் இப்படி வேதாந்தம் பேசுவதுண்டு! அந்தக் குழுவிலே நீயும் ஒருத்தி! "அந்த" அதிர்ச்சி ஏற்பட்டு, உடம்பு சூடேறி...உள்ளம் குழம்பி..."ஒரு கையில் வளைபூண்டு, மறுகையில் பூண மறந்து ஓடுவதும்...நகைப்பவரை நாடுவதும், கவிழ்வதும்...இருதனத்துக் கச்சதனை அரையில் உடை தொடுவதும்...பின இந்த உடை கச்செனவே சந்த முலைக்கிடுவதும்..." எந்தப் பெண்ணுக்கும் தப்பமுடியாத விதி! இன்றல்ல; என்றேனும் ஓர் நாள் அந்த விதி உன் வாழ்விலும் செயல்படும்...அதற்குள் உன் தந்தை உனக்கு மணமுடிக்காமலிருந்தால்!

அமரா : சரி...நாமென்ன மடிந்தா போகப் போகிறோம்...பார்ப்போம்...

[கேட்டபடியே சுந்தரசோழன் வருதல்.]

சுந் : என்ன வேதாந்தம்...

அமரா : காதல் என்பது பலங்கெட்ட மனதின் மயக்கம் என்கிறேன் நான்.

சுந் : மறுத்துரைக்கிருள் மல்லிகா--இல்லையா!

அமரா : ஆமாம்!

சுந் : அவளுக்கு அனுபவம்...

அமரா : அனுபவமா! (திகைப்பு)

சுந் : ஆமாம்!

[சொல்லவேண்டாம் என்பதுபோல பரிதாபமாகக் கையசைக்கிருள், மல்லிகா...அமராவதிக்குத் தெரியாமல்...]

மல்லிகையின் அன்னை, கன்னியாயிருக்கும்போது காதலித்த கதை தெரியாதா உனக்கு!...

அமரா : கேட்டிருக்கிறேன்...

சுந் : கடைசியில் அது திருமணத்தில் முடியவில்லையா? அது, மல்லிகையின் குடும்ப அனுபவமில்லையா! அதுதான்...

[மல்லிகை பெருமூச்சு விட்டு, அமைதி பெறுகிருள். அமராவதியும் அமைதிபெற்று, மல்லிகையைப் பார்த்தல்.]

—காட்சி முடிவு—

களம் 11

காட்சி : 11

இடம் : ஆற்றங்கரை.

நேரம் : அந்தி.

[புலவர்களைப் பிரிந்து, உற்சாகம் மிகுத்து, ஆற்றங்கரைக்கு வந்து நிற்கிருன் அம்பிகாபதி. நின்று...சுற்றுமுற்றும் கம்பீரமாகப் பார்க்கிருன். அவன் இதயம், எண்ணங்களைக் குவித்துக் கொட்டுகிறது.]

அம் : இதயம் :

அரசனாக இருப்பதைக் காட்டிலும் புலவனாக இருப்பதிலே ஆனந்தம் அதிகம்! தலையணைக்கு அடியிலே சஞ்சலங்களை வளர விட்டுக்கொண்டு, பேரரசுகளைக் கட்டி ஆளுவதைக் காட்டிலும், தெளிவுபெற்ற மனதும் தொல்லைகளற்ற வாழ்வும் கொண்டு...பாடித் திரிவதிலே தான் மனித வாழ்வின் நோக்கம் நிறைவேறுகிறது...

உலகம் அதைத்தானே சொல்லுகிறது! ஆறு...தடுப்பாரில்லை...காற்று... கேட்பாரில்லை... குயில்... கட்டுப்பாடில்லை... கொஞ்சும் அஞ்சுகம்... அவ்வாறே! உலகம் உண்டானபோது...அதில் முளைத்த முதல் மனிதனின் எண்ணமும் அதுவாகத்தானிருந்திருக்க வேண்டும்! கூடிவாழப் பழகிய மனிதன், வாழ்க்கையின் உண்மை இன்பங்களை முழுதும் புறக்கணித்து விட்டான்! வேலிகள் இட்டால்தான் வேதனை குறையும் என்கிற நிலையை ஒரு கூட்டம் ஒரு காலத்தில் ஏற்படுத்த...அடுத்த கூட்டம், அதற்கு அடுத்த ஒரு காலத்தில் வேலியை முளையடித்து உறுதிசெய்து விட்டது! தனியொரு மனிதனின் பாதையையும் வேகத்தையும் அரசு, நிர்ணயிக்கிறது! அதுமட்டும் இல்லாமலிருந்திருந்தால்...குடும்ப முறையோடு கூட்டு வாழ்க்கை நின்று...அரசுமுறை இல்லாமலிருந்திருந்தால்...மனித மனத்தில் இன்னும் அதிகமான வானம் பாடி உணர்வு...காற்று உணர்வு...ஆற்று உணர்வு... உண்டாகியிருக்கும்!

வாழ்க்கை...தங்குதடையின்றிக் காட்டாறுபோல் போக வேண்டும்...உணர்ச்சியே அதை அழைத்துச் செல்ல வேண்டும்! வாழ்க்கையில் அறிவைப் போட்டு ஆய்ந்து குழப்பக் கூடாது! உணர்ச்சி, அறிவின் தாய்! தாயின் றேல் சேயில்லை!...ஆம்! வாழ்க்கைக்கு அறிவு தேவையில்லை! உணர்வே தேவை!

[பின்னாலிருந்து, "தனிமையில் இனிமையோ?" என்று ஒரு குரல் கேட்கிறது. அம்பிகாபதி திரும்பிப் பார்க்கிருன்.

(தொடரும்)

வளரக் கெடும்!

கவிஞர் - முடியரசன்

குறுநடை நடந்து கூடி ஒன்றாய்க்
கோழியின் குஞ்சுகள் குலவி யிருந்தன;
எச்சில் இலைகள் இன்னும் பற்பல
மிச்சில் எல்லாம் மிதந்து இடக்கும்
குப்பைக் கோட்டில் கூர்உகிர் விரலால்
கிளறிக் கிளறிக் கிடைத்ததைக் கோழி
குஞ்சுகட் களிக்கக் கொக்கரித் ததுவே;
பறந்து வந்தன பச்சிளங் குஞ்சுகள்
மொய்த்திடும் அவற்றுள் முந்தித் திறக்கும்
மென்சிறு வாயுள் வன்பெரு மூக்கால்
கொஞ்சிக் கொஞ்சிக் கொடுத்தது கண்டேன்;
அடடா அன்பு அன்னையின் அன்புக்
கேதடா உலகில் ஈடும் எடுப்பும்?
அன்றினைப் பிறப்பும் அன்னையின் அன்பால்
பின்னிக் கிடக்கும் பெருநிலை உணர்ந்தேன்;
அவைகள் யாவும் அஞ்சிட ஓர்குரல்
வானிற் கேட்டது; வட்ட மிட்ட
பருந்து வந்து பாய்ந்தது; கோழி
தன்முழு வலியால் தாக்கி விரட்டும்
தகவு கண்டு தாய்மைப் பண்பை
மேலும் வியந்தேன் சென்றன சென்றன
குஞ்சுகள் பெரிய கோழிகள் ஆயின;
குப்பையை அன்னைக் கோழி கிளற
இரைபெறும் நோக்கால் இளைய கோழிகள்
ஓடி வந்தன உடனே இரைதனைக்
கொடுக்க மறுத்துக் கொத்தி விரட்டிய(து)
ஒற்றுமை காணேன் உயர்ந்த அன்பைக்
காணேன் பகைமை கண்டேன் அந்தப்
பேதைக் கோழியின் பிழையினைக் கண்டதும்
உலகில் நடக்கும் ஒன்றனை யுணர்ந்தேன்;
ஈயும் எறும்பும் இருந்திடப் பொறுஅள்
தன்மகன் நோயுறின் தான்மருந் துண்பாள்
அன்பின் உச்சியில் அமர்ந்திருப் பாள்தாய்
பெரியோன் ஆன பின்னர்த் திருமணம்
நடத்தி மகிழ்வாள் நாட்கள் சென்றால்
அன்பை மறப்பாள் அருமை மகனென
எண்ணவும் செய்யாள் எழுப்புவள் பகைமைய
பூனையும் எலியும் போல நடப்பாள்
என்னே உலகம்! என்னே தாய்மை!
தாயும் கோழியும் தம்முள் ஒன்றென
வாழ்தல் நன்றோ வாழின். இழிவே.

குட்டி இலக்கியம்

★ ★

மாடியிலிருந்து மண் வீசுவோர்!

தலைமறைவாக இருந்து தகாத செயல் புரிவோர்!

கூட்டத்தில் குழப்பம் விளைவிப்போர்!

கும்மிருட்டில் கொடியவிழ்ப்போர்!

இத்தகு செயல் (?) வீரர்கள் பலரை தி. மு. கழகம் சந்தித்திருக்கிறது. அதுபோன்ற இழிகுணத்தார் குறுக்கிட்டுச் செய்யும் ஈனச் செயல்கள், தி. மு. கழக வரலாற்றில் குட்டி 'இலக்கியங்களா'க பரிணமிக்கின்றன. அப்படிப்பட்ட இலக்கியங்களை காட்சியாக்கிக் காட்டிய மேடைகளில் மணப்பாறையும் புதிதாக இடம் பெறுகிறது.

ராமராஜ்யக் 'களபதி'களே ராஜகட்டம் பாருங்கள்

கொட்டை எழுத்துக்களில் தலைப்புகள்; 'கோரமுடிவு' ஏற்பட்டு விட்டதாக பொருள்தரும் எழுத்துக்கள்; மூலை முடுக்குகளில் இருப்போர், இப்படியும் நடக்குமா? என்று மூக்கின்மேலே விரல் வைக்கும் பயங்கரச் செய்தி! சென்ற வாரம் நடந்த 'மணப்பாறை' நிகழ்ச்சியை தேசிய இதழ்கள் அவ்வாறுதான் பிரசுரித்திருந்தன. நாட்டோரிடம் நம்மை 'பேயா'க்கிக் காட்டுவதில் அந்தக் 'குணசீலர்'களுக்கு என்னதான் ஆசையோ தெரியவில்லை. அவ்வளவு பித்தலாட்டம் நமது கழக விஷயத்தில். செருப்புகள் பரிமாறப்பட்டனவாம்! பொதுச் செயலாளர் கையிலிருந்து கொடி பறிக்கப்பட்டதாம். பார்ப்பன இதழ்கள் தெரிவித்த தகவல் இவை. உண்மையில் நடந்தது தான் என்ன? இதோ, நமக்குக் கிடைத்த உண்மைச் செய்தி!

7--7--55ல், மணப்பாறை முசாபரி பங்களாவுக்கு அருகில் உள்ள மாவட்ட போர்டுக்கு சொந்தமான திடலில், மணப்பாறை திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்தினரால், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியனைக் கொண்டு பொதுக் கூட்டம் நடத்த அனுமதி பெற்று விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

அந்த மைதானத்தில் ஒரு காங்கிரஸ் கொடி பறந்து வருகிறது: எனவே, 'அந்த மைதானம் காங்கிரஸ் காரர்களுக்குத்தான் சொந்தம்---பிறர், கொடியேற்றக் கூடாது,'—எனப் பொருந்தாத வாதம் செய்தனர்—இவ்வூர் இளைஞர் காங்கிரஸ் தோழர்கள்.

மணப்பாறை டிப்டி தாசில்தார் அவர்கள், இருசாராரையும் கூப்பிட்டு, 'வழக்கம்போல் கொடியைக் கட்டி கூட்டம் நடத்தட்டும்; நாளை காலையில் எப்பொழுதும்போல் கொடியை அவிழ்த்துவிடுங்கள்; நான், நிலத்தின் உரிமை பொதுவாக உள்ளதா—அல்லது காங்கிரஸ் காரர்கள் சொல்வதுபோல், அவர்களுக்கே உரிமையானதா என்பதை பார்த்துத் தெரிவித்தவுடன், பொதுவானதாக இருந்தால், நீங்கள் தாராளமாய் தனித்தனியே கொடியேற்றிக்கொள்வதில் ஆட்சேபனை கிடையாது.' என்று சொன்ன முடிவை இருசாராரும் ஏற்றுத் திரும்பினர். "ஆனால் மாலை 6 மணிக்கே மைதானத்தில், தி. மு. கழகக் கொடி ஏற்றப்பட வேண்டிய கம்பத்தின் அருகே, இளைஞர் காங்கிரஸ் தோழர்கள் பலர் உட்கார்ந்துகொண்டு, கொடி ஏற்றுவதைத் தடை செய்யப் போவதாகக் கூறினர்.

எனவே, மீண்டும் டிப்டி தாசில்தாரிடம் நிலைமையைக் கூறினர்; அவர், 'பாதுகாப்புக்கு போலீசார் போயிருப்பா; இளைஞர் காங்கிரஸ் காரர்கள், இன்று, கொடியேற்றி கூட்டம் நடத்துவதைத் தடை செய்ய மாட்டார்கள்; எனவே, நீங்கள் கூட்டத்தை நடத்தலாம்,' என்று சொல்லியனுப்பினர். பின்னர், தோழர்கள், பொதுக் கூட்டம் நடத்த இருந்த மைதானத்திற்கு வந்து கொடியேற்ற முயற்சிக்கையில், தயாராக இருந்த இளைஞர் காங்கிரஸ் தோழர்கள், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களைக் கொடிக் கம்பத்தருகே வரவொட்டாமல், பலாத்காரமாய் தடுத்ததுமன்றி, ஒரு இளைஞர் காங்கிரஸ் தோழர் கொடியை அறுத்துக் கொண்டு ஓடி, நெருப்பு வைக்கப் போவதாகவும் சொன்னர்.

அருகில் நின்றுகொண்டிருந்த நமது கழகத் தோழர், இளைஞர் காங்கிரஸ் தோழர்களின் பலாத்காரத்தையும் பொருட்படுத்தாமல், கம்பத்தின் மீது ஏறி, நம் கழகக் கொடியைக் கட்டிப் பறக்கவிட்டார்.

இந்த நிகழ்ச்சியின் துவக்கத்திலிருந்து கடைசி வரையிலும். போலீசார், இளைஞர் காங்கிரஸ் தோழர்களைக் கலைந்து போகும்படி கேட்டுக் கொண்டும்—அப்புறப்படுத்த முயன்றும் வந்தனர்; அதை அலட்சியப்படுத்தி இ. கா.-வினர் அந்த இடத்திலேயே இருந்து கொண்டு, பலாத்காரச் செயல்களைத் தொடர்ந்து நடத்திவந்தனர். கடைசியாக 'குழப்பம் செய்பவர்களை போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்வோம்' என்று போலீசார் கூறியபின், கலகம் விளைவித்துக் கொண்டிருந்த இ. கா.-வினர் அந்த இடத்தை விட்டு கலைந்து சென்றனர்.

"பின்னர், கூட்டம் 8 மணிக்குத் துவக்கப்பட்டது. மாவட்டச் செயலாளர் தோழர் அம்பில்-தர்மலிங்கம் அவர்கள் பேசும்போது, காங்கிரஸ் காரர்களும், தி. மு. கழகத்தைச் சேர்ந்த மணவை செயலாளர் காசிநாதனும் மாவட்ட போர்டு போன்ற பொது நிர்வாகத்தில்பங்குகொள்ள ஜனநாயகம் அனுமதிக்கும்போது. பொது இடங்களில் காங்கிரஸ் கொடிக்கு அருகில், தி. மு- கழகக் கொடி பறப்பதை ஏன் மறுக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி விளக்கினர்.

"பின்னர், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மணப்பாறை வட்டக் கிளைகள் பலவற்றின் வரவேற்பை ஏற்றுக் கொண்டு, பொதுக்கூட்டங்களில் இதுவரை இவ்வூரில் நடைபெற்றிருக்காத அளவு பெரும் ஜனத்திரள் கூட்டுவதற்கு காரணமாயிருந்த இளைஞர் காங்கிரஸ் தோழர்களுக்கு நன்றியறிதலை முதற்கண் தெரிவித்துக்கொண்டார்.

"ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதால், அசம்பாவித நிகழ்ச்சிகளில் இறங்காதீர்கள்; தேனீ நிகழ்ச்சிகளைப் பல இடங்களில் செய்வதன் மூலம் தி. மு. கழகத்தினரை மடக்கிவிடலாம் என எண்ணாதீர்கள்; ஜனநாயகம் என்ற சொல்லுக்கு ஓரளவாவது மதிப்புக் கொடுங்கள்" என்று அவர்களை கேட்டுக்கொண்டார்.

பின்னர், அவர், இளைஞர் காங்கிரஸ்காரர்கள் பலாத்காரச் செயலில் ஈடுபட்டு, கூட்டத்தை தடை செய்ய முயலுகையில், கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு ஆகியவற்றைக் கடைப் பிடித்து வெற்றி கண்ட இயக்கத் தோழர்களைப் பாராட்டிப் பேசினர்.

பின்னர், கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய மணவை தி. மு. கழகச் செயலாளர் தோழர் காசிநாதன் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

தங்களது முயற்சியிலே தோல்வி கண்ட இ. கா. வினர், தி. மு- கழகத் தோழர்களான எ- எஸ். கணபதி, என், வடிவேல். எம். சேது. முருகேசன், நீலகிருட்டிணன் அமீர்பாட்சா ஆகியோர் தங்களை அடித்துக் காயப்படுத்தி விட்டதாகப் பொய் ரிப்போர்ட் தாக்கல் செய்து இருக்கிறார்கள்.

இரவு முழுவதும் போலீசார், தி. மு. கழகக் கொடியைப் பாதுகாத்து வந்தனர். நகரெங்கிலும் இளைஞர் காங்கிரசாரின் அசம்பாவிதச் செயல் குறித்து பேசப்பட்டு வருகிறது.

உண்மை நிகழ்ச்சிகள் இவ்விதம் நடைபெற்றிருக்க, எதிர்க்கட்சி ஏடுகளில் பொதுச் செயலாளர் அவர்களிடம் இருந்து கொடி பிடுங்கப்பட்டது எனச் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது; பொதுச்செயலாளர் கொடிக் கம்பத்திற்கு இடையில் செல்லும் முன்னமேயே சம்பவங்கள் நடைபெற்றுவிட்டன."

இவைதான் நடந்தநிகழ்ச்சிகள், மணவைச் செயலாளர் தந்த தகவல். ஆனால் பார்ப்பன இதழ்கள் தந்ததோ...பயங்கரம்! பயங்கரம்! அப்படிப்பட்ட இதழ்கள்தான் இந்த நாட்டின் பெரிய பத்திரிகைகள்! இவர்கள் கெட்ட கேட்டிற்கு 'பத்திரிகாதர்மம்' வேறு! அவமானம்! அவமானம்! தமிழ்நாட்டு அரசியலுக்கே அவமானம்! மறைந்திருந்து வாலியை மாய்த்த 'ஸ்ரீமான்'கள் இன்னும் வாழ்கிறார்களே!!

வெண்பாப் போட்டி 12.

★

ஈற்றடி :

வாள்கொண்டு தாக்குவோம் வா !

முடிவு தேதி 23-7-55.

கள்ளன்

முன்னொரு காலத்தில் தென்னாட்டில் திருமழபாடி யென்னும் சிவ தலத்தில் திருநீலகண்ட சாஸ்திரி யென்னுமோர் புரோகிதனிருந்தான். அவன் மிகவும் ஏழையாதலால் வெகு நாளாய் பிரம்மசாரியாயிருந்து கடைசியாய் அறுபது வயது ஆனபின்பு சஷ்டிபூர்த்தி செய்வதோடு ஒரு எளிய பார்ப்பனப் பெண்ணை தான் யாசகம் செய்து சம்பாதித்த திரவியமெல்லாம் கொடுத்து மணமியற்றினான். பின்பு கொஞ்சக் காலத்திற்கெல்லாம் அவனுக்கு ஓர் ஆண் பிள்ளை பிறந்தது. அவ்விருத்தப் பார்ப்பனன் தன்னைப் புத்தென்னும் நரகத்தினின்றும் மீட்பதற்குப் புத்திர சம்பத்துண்டாயிற்றென்று ஆனந்த பரவசமாகி, சுபதினம் பார்த்து சிவநேச சாஸ்திரியென்று அப்பிள்ளைக்கு, நாமகரணமிட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக, அக்குழந்தையை வளர்த்து வந்தான். அந்தப் பிள்ளையின் ஜாதகத்தைப் பார்க்க, அதிகக் கல்வியும் ஐஸ்வரியமு முண்டாகுமென்றும், பிதுர் ஸ்தானம் பலத்திருப்பதால் தனக்கும் தன் மனைவிக்கும் சீக்கிரத்தில் முடிவு நேரிடாதென்றும், மிகச் சந்தோஷமாய் யாசகமெடுத்து ஜீவனம் செய்து கொண்டிருந்தான். அக்குழந்தைக்கு ஐந்து வயதானவுடனே, திருநீலகண்ட சாஸ்திரி யாதோ ஒரு காரணத்தால் மரணமடைந்தான். அவன் மனைவி அதிபாலியத்தில் வித்வையானதைக் குறித்து வெகுவாகத் துயரப்பட்டு யாதொரு ஆதரவுமின்றித் தன் மகனாகிய சிவநேச சாஸ்திரியை யழைத்துக்கொண்டு அவ்வூருக்கருகாமையிலுள்ள பஞ்சநதி க்ஷேத்திரமாகிய திருவையாறு என்னுமூருக்கு வந்து அங்கிருந்து ஓர் தருமப் பாடசாலையில் தன் புத்திரனைக் கல்வி கற்கும்படி விட்டுத் தானொரு வீட்டில் வேலை செய்து ஜீவனம் பண்ணிக்கொண்டு வந்தாள்.

இப்படியிருக்குங் காலத்தில் அவ்வாலிபனும் அதிக புத்திசாதுரியமாய் சமஸ்கிருத பாஷையையும் நன்கு யெழுத வாசிக்கக் கற்றுக்கொண்டு பதினைந்து வயதிற்குள் புராண முதலானவை பிரசங்கம் செய்யும் சமர்த்துடையவனானான். பின்பு இவ்வாலிபன் கல்வி கற்பதை நிறுத்திவிட்டுத் தானும் தன் தாயும் தனியே யிருக்கவேண்டுமென்னும் அபேட்சையினால், அன்று முதல் பாரதம், இராமாயணம் முதலிய கதைகளை இராவேளைகளில் ஒரு கோவில் வாசலில் உட்கார்ந்து அங்கு வருகிற பெண்பிள்ளைகளுக்கும், கல்வியறிவில்லா முழுமூடர்களுக்குஞ் சொல்லி அவர்கள் கொடுக்கிற சொற்ப வரும்படியைக் கொண்டு ஜீவனம் பண்ணிக்கொண்டு வந்தான். இஃதன்றியும் ஐப்பசி மாதத்தில் துலாஸ்நானம் செய்யும்படி காவேரியாற்றுக்குப் போகிறவர்கள் கேட்கும்படி, யவர்களுக்குத் துலாக்காவேரி புராணமுஞ் சொல்லுவது வழக்கம். அப்படிச் சொல்லும்போது ஸ்நானத்திற்குப் போகிற பெண்கள், அரிசி, காய் கறி பதார்த்தங்கள் கொண்டுவந்து இப்பார்ப்பனச் சிறுவன் தனக்கருகாமையில் விரித்து வைத்திருக்கும் வஸ்திரத்தில் போடுவதுண்டு. அப்பதார்த்தங்களை யெடுத்துக் கொண்டு போய்த் தன் தாயிடங் கொடுக்க, அவள் அவைகளை வாங்கி வெவ்வேறாய்ப் பொறுக்கிப் பாகம் பண்ணுவாள்.

இப்படித் தினந்தோறும் அவன் கொண்டுவருகிற அரிசி காய்கறி பதார்த்தங்களை வெவ்வேறாகப்பிரிப்பது அவளுக்கு மிகவும் கஷ்டமாயிருந்தபடியால், ஒருநாள் தன் மகனைப்பார்த்து அப்பா குழந்தாய் நீ புராணம்சொல்லும்போதுகொண்டு வந்து போடுகிற காய் கறிகளை வெவ்வேறாய்ப்பிரிப்பதிலேயே எனக்குப் பொழுதெல்லாம் கழிந்துவிடுகிறதே யென்றாள். இதைக்கேட்ட அப்பார்ப்பனச் சிறுவன், அப்படியே ஆகட்டுமென்று தன் தாய்க்குச் சொல்லி, மறுநாட்காலையிலெழுந்து, காவேரிக்குச் சமீபத்தில்தான் புராணம் சொல்லும் இடத்திற்குப் போய்த் தன் ஆசனத்திலுட்கார்ந்து தனக்கெதிரே தன் வஸ்திரத்தைவிரித்து, ஜனங்கள் ஸ்நானத்திற்கு வருகிற சமயம் பார்த்து புராணத்தை கையிலெடுத்துக்கொண்டு "இப்படியாகக் காவேரியம்மாள் மேற்கேயிருந்து கிழக்கே வருகிற காலத்தில் தன்னிரு பக்கத்திலும் படுக்கைகளிலும் வயல்களிலுமுள்ள, பாகல், அவரை, புடலை, கத்தரி முதலிய செடிகொடிகளையும், நெல் கேழ்வரகு, கம்பு, சோளம் முதலிய தானியப் பயிர்களையும் அழித்து நாசமாக்கிக்கொண்டு வருகிறாளாம். ஏன் அப்படி வருகிறாளென்றாலோ, அவைகள் முன் ஜென்மத்தில் பாகற்காயைப் பாகற்காயோடு போடாமலும், புடலங்காயை, புடலங்காயோடு போடாமலும், அரிசியை அரிசியோடு போடாமலும் பார்ப்பனர்களுக்கு வருத்தத்தை யுண்டுபண்ணின பாவிகளுடையவைகளாம். ஆகையால் ஓ ஜனங்களே! நீங்கள் அரிசியை அரிசியோடு போடுங்கள். கத்தரிக்காயை கத்தரிக்காயோடு போடுங்கள்" என்று புத்தகத்திலெழுதியிருக்கிறதுபோல் வாசித்தான். இதைச் செவியுற்ற ஜனங்கள் அவன் சொல்லியது உண்மையென நம்பி, அவ்வாறே காய்கறி பதார்த்தங்களை வெவ்வேறாய்ப் போட்டார்கள். அவைகளை எடுத்துக்கொண்டு போய்த் தன் தாயிடத்திற்கொடுத்துத் தான் செய்த தந்திரத்தைச் சொல்ல, அவள் அதைக் கேட்டு மகிழ்ந்து, தன் புத்திரன் சாமர்த்தியத்தை வியந்து "அப்பா! என் அருமைக் குழந்தாய், கண்ணைக் கொடுத்த தெய்வம் மதியைக் கொடுக்காதா! நீ சிறு வயதிலேயே உன் தகப்பனை இழந்தாயானாலும் நீ அதி சூட்சம புத்தியுள்ளவனாயிருக்கிறாய்" என்று சொல்லித் தன் மகனை மார்போடணைத்து முத்தமிட்டு ஆனந்தமடைந்தாள். தன் தாய் சொல்லியதைக் கேட்டுப் பூரிப்படைந்து அது முதல், தனக்கு ஆகவேண்டிய காரியங்களையெல்லாம் புராணத்திலிருப்பதுபோலவே வாசித்து ஜனங்களையே மாற்றுவதில் கைதேர்ந்தவனானான்.

இப்படியிருக்கும் நாளில் ஒரு நாள் பிரசங்கம் செய்யும்பொழுது பார்ப்பனர்களைப்பற்றி வெகுவாகப் புகழ்ந்துப் பேசிப் பார்ப்பனர்களுக்குதவி செய்பவர்கள் ஒரு அற்ப உதவி செய்தபோதிலும்கோடீஸ்வரராவார்கள்; அவர்கள் செய்த பாவமெல்லாம் அடியோடு தீப்புகுந்தகாடுபோல் அழிந்துபோகும். பிராமணர்களுக்கொருவேளை போசனத்திற்கு வழி பண்ணினவர்களுக்குப் பிரமகத்தி முதலிய மகா பாதகங்களைச் செய்தபோதிலும், நரக பயமேயில்லையென்று பிரசங்கித்தான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு திருடன், நல்லது நாம் வெகு காலமாய் திருடுவதினாலேயே ஜீவனம் செய்து கொண்டு வருகிறோமே; இன்னும் திருட்டுத் தொழிலிலே நமக்கு ஜீவனமாயிருக்கிறதே, நாம் செய்த பாவத்தை யெல்லாம் போக்க வெகு சுலபமான வழி இப்புராணிகர் சொல்லுகிறாரேயென்று தனக்குள்ளே ஆலோசித்துக் கொண்டு, அவன் கையிலுள்ள பணம் செலவழிந்து விட்டபடியாலும், அவன் பிறவூரானாகையால் கடன் வாங்க அவனுக்குப் பழக்கமானவர்கள் அவ்வூரில் இல்லாததினாலும் அன்றிரவில் ஊரடங்கியபின் அக்கிரகாரத்திற்குப் போய் ஒரு சிறு வீடிருக்கக் கண்டு, அதில் கன்னமிட்டுள்ளே நுழைந்து அங்குள்ள சொத்துக்களையெல்லாம் கைப்பற்றி வெளியே ஓடித் தப்பிவிட்டான். அவன் கன்னமிட்ட வீடு அப்பௌராணிகன் வீடாதலால், அப்பார்ப்பனன் பொழுதுவிடிந்த பின் வீட்டிற் களவு போயிருப்பதைக் கண்டு ஏக்கமுற்று, நாமெத்தனையோ பெயரை யேய்த்தோமே, இப்பொழுது கள்வன் நம்மை யேய்த்துவிட்டானேயென்று துக்கப்பட்டு, ஆயினும் நம்முடைய புராணமும் அதைக் கேட்பதற்குப் பேதைப் பெண்களும் உள்ள வரையில் நமக்கு யாதொரு குறையுமில்லையென்று தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு, மறுநாட் காலையில் வழக்கம்போலவே தன் புராணத்தை யெடுத்துப் போய் தன்னிருப்பிடத்திலிருந்து வாசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அந்தத் திருடனும் அவனிடத்திற் போய், அவன் பிராமணனுக்குதவி செய்தால் பாவமெல்லாம் பறந்தோடும் என்று சொல்லுகிற சமயத்தில் தான் அன்றிரவு திருடின சொத்துக்களில் பொன் கட்டிய உருத்திராட்சம் ஒன்றை அப்பார்ப்பனன் விரித்திருந்த வஸ்திரத்திற் போட்டான். அதைக் கண்ட பௌராணிகன் திடுக்கிட்டு, ஓகோ இது நம்முடையதல்லவா? நமது வீட்டில் இராத்திரி களவு செய்தவன் இவனாய்த்தானிருக்க வேண்டுமென்றெண்ணி, அப்பா இதேது? திருட்டுச் சொத்தாய் தோன்றுகிறதே. பார்ப்பனன் சொத்தை அபகரிப்பவர்கள் ரௌரவ நரகத்தையடைவார்கள் என்று சாத்திரமிருக்கிறதே யென்றான். அதற்கு அந்தக் கள்ளன் அந்நரக பயத்தைவிலக்குவதற்காகவே உமக்கு இந்த உருத்திராட்சத்தைத் தானஞ் செய்தேன். ஏனெனில், பார்ப்பனர்களுக்கு அற்ப உபகாரம் பண்ணினாலும் பண்ணினவர்களுக்கு யாதொரு நரக பயமுமில்லையென்று புராணத்தில் வாசித்தீரே என்று சொன்னான். பார்ப்பனன் புராணத்திலிருப்பதைவிட்டுப் பேராசையினால் பொய் சொன்னதினாலல்லவோ நமக்கிக்கதி நேரிட்டது. ஆயினும் தண்டப் பிரயோகம் செய்யாமல் சொத்தை மட்டும் கவர்ந்தனனே யென்றும் மனதைச் சற்றுத் தேற்றிக்கொண்டு இனி அவ்வூரிலிருக்கலாகாது என்று தன் தாயை யழைத்துக்கொண்டுகால்நடையாக சென்னை நகரைநோக்கிச்சென்றான்.

இவ்வாறு வருகிற வழியில் அநேக ஊர்களுக்குப் போய் அங்கே இராமாயணம் பாரதம் முதலிய புராணங்களைப் பிரசங்கித்து யாசகம் செய்து கடைசியாய்ச் சென்னை நகருக்கு வந்து அவ்விடத்தில் பெரிய தனக்காரர்கள் யாரென்றறிந்து அவர்களிடத்திற் போய்த் தான் தென்தேசத்து வேதியனென்றும் இராமாயணம் பாரதம் முதலிய புராணப் பிரசங்கத்திற் கைதேர்ந்தவனென்றும் சொன்னான். அதைக் கேட்டு அவர்கள் மகிழ்ந்து தென்தேசத்திலிருந்துஇராமாயண சாஸ்திரியார் வந்திருக்கிறாரே யென்று ஊரெங்குந் தெரிவித்து, அநேக கனவான்கள் வீட்டில் காலக்ஷேபம் செய்யும்படி ஏற்பாடு பண்ணி, இவனுக்காக அநேக சமாராதனை முதலானவைகளெல்லாம் செய்து அவனைக் கனப்படுத்தினார்கள்.

அன்று முதல் சென்னை நகர் முழுதும் இராமாயண சாஸ்திரியார் பெயர் பரவிற்று. தினந்தோறும் அவன் பிசங்கத்தைக்கேட்க அநேக பெண்களும் அவர்களைப் போலொத்த ஆண்களும் கூட்டம் கூட்டமாய் வந்து அதைக் கேட்டு மகிழ்ந்து, அவனுக்குத் தக்ஷணையாக விசேஷ திரவியங்களையும் அரிசி பருப்பு முதலியவைகளையுங் கொடுத்து, அவனுக்கு நமஸ்காரஞ் செய்வார்கள்; அவனுக்கு இப்படி வரும்படி சாஸ்தியாகி வரவே அதிக ஆனந்தமுண்டாகி முன்னைப் பார்க்கிலும் பதின் மடங்கதிகமாய்ப் பெருத்துவிட்டான்.

தினந்தோறும், தடித்த உடலும் கறுத்த நிறமும்,பெருத்தவயிறும், சாடிவாயும், சப்பைமூக்கும், இரட்டை மண்டையும், உட்குவிந்த கண்களுமுள்ள இப்பார்ப்பனன், பிரசங்கத்தை ஆரம்பிக்கும்படித் தன் ஆசனத்திலுட்கார்ந்தபின்

(அடுத்த பக்கம் பார்க்க)

மெய்ச்செல்வம் எது ?

'வாழ்வது எப்படியோ?' தொடர் கட்டுரையின் உட்பிரிவான 'மெய்ச் செல்வம் எது ?' காலம் தாழ்த்திக் கிடைத்தமையால் இந்த இதழில் இடம் பெறவில்லை. அடுத்த இதழில் தொடங்கப்பெறும். —ஆர்

கள்ளன்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

வேறொரு பார்ப்பனன் ஒரு கையிற் சந்தனக்கிண்ணமும்,மற்றொரு கையில் பன்னீர் செம்பும் புஷ்பமாலையுங்கொண்டுவந்து மிகவும்வணக்கமாயவனெதிரே நின்று சுவரில் வெள்ளையடிப்பதுபோல் அவன் தேக முழுவதும் சந்தனத்தை பூசி அவன் தலையிற் பூவைச்சூடி கழுத்தில் மாலையைப் பேரட்டு அவனுக்குத் தூபதீபம் காண்பித்து அவனை ஒரு உயிர்த்தெய்வத்தைப்போற் பாவித்து வணங்குவான். பின்பு பார்ப்பனன் கதாப் பிரசங்கத்தை ஆரம்பிப்பான்.

இந்தப் பிரகாரம் இவன் நாள் தோறும் பிரசங்கம் பண்ணிக் கொண்டு வரும் பொழுது, ஒரு தினக் கூலிக்காரனும் ஆதிமுதல் மிக விசுவாசத்துடன் இவ்விராமாயணப் பிரசங்கத்தைக் கேட்டு, அப் பார்ப்பனன் சொல்வதெல்லாம் உண்மை யென்றே நினைத்துத் தினந்தோறும் தவருமல் வந்து கேட்பது வழக்கம். ஒரு நாள் இராமாயணத்தில் அயோத்தியா காண்டம், மந்தரை சூழ்ச்சிப் படலத்தில், தசரதனுனவன் இராமருக்குப் புத்தி போதிக்கிற சந்தர்ப்பத்தை யெடுத்து அப் பொழுது அந்தத் தசரதமகாராஜாவானவர் தன்னுடைய புத்திரனுகிய இராமனைப் பார்த்து, "அப்பா! என்னருமைக் குழந்தாய்! இந்தப் பூலோகத்தில் இராஜாக்கள் பிறப்பது பார்ப்பனர்களைப் பூசிப்பதற்காக வேயன்றி வேறொன்றிற்கல்ல; இப் பூமியிலுள்ள எல்லா சிருஷ்டிப்புகளும் அவர்களுக்காகவே உண்டாக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் அவர்களுக்குப் பூதேவதைகளென்று பெயர். இவ்வுலகத்தைப் படைத்த பிரமனும், அதைக் காக்கின்ற விஷ்ணுவும், அதை யழிக்கின்ற உருத்திரன் முதலான எல்லா தேவதைகளும் அவர்களுக்குள்ளடக்கம். இதையறிந்தன்றோ பெரியோர்கள்,

தெய் வாதீனம் ஜகத் ஸர்வம்
மந்திரா தீனம் தசை வதா
தன்மந் திரம் பிராம ணுதீனம்
பிராமணு மம தே வதா :

என்றபடி, இவ்வுலகம் தெய்வத்திற்கடக்கம், தெய்வம் மந்திரத்திற்குள்ளடக்கம்; ஆகையால் பார்ப்பனர்களே நமக்குத் தெய்வம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் உன்னுயிர் போவதாயிருந்தாலும் பார்ப்பனர்களைக் காப்பாற்றுவதற்கு நீ பின்னடையாதே யென்றும் இன்னும் மற்ற காரியங்களையும் நன்ருய் எடுத்துச் சொன்னூர்.'' என்று பிரசங்கம் செய்தான். இதைக் கேட்டுக் கொண்டிருந்த அத்தினக் கூலிக் காரன் ''ஆகா! பார்ப்பனுள் காரியம் இன்றல்லவோ நமக்கு விளங்கிற்று; இது வரையிலும் நாமறியாமற் போனேமே'' யென்று நினைத்து, அப்பௌராணிகன் சொல்வதெல்லாம் உண்மை மயென்று எண்ணிக் கொண்டு, கதை முடிந்தவுடனே வழக்கம் போல் வீட்டுக்குப் போனுன்.

அவன் வீடு போய் சேர்ந்தவுடன் இரண்டொரு நாளாய் வியாதியாயிருந்த அவனுடைய ஒரே பேரனுன புத்திரன் இறந்துபோனுன். அப்பொழுது இவனும் இவன் மனைவியும் மிகவும் அழுது புலம்பிக் கொண்டிருக்கிற சமயத்தில், இராமாயண சாஸ்திரியார் பிரசங்கம் செய்யும் பொழுது தெய்வங்களெல்லாம் பார்ப்பனர்களுக்குள்ளடக்கம் என்று சொன்னது அவன் ஞாபகத்திற்கு வர, உடனே தன் மனைவியைப் பார்த்து நீ அதிகமாய் விசனப்படாதே. நம்முடைய பிள்ளை பிழைக்க ஒரு வழியுண்டு. தேவதைகளெல்லாம் பார்ப்பனர்களுக்குள்ளடக்கமென்று இராமாயண சாஸ்திரியார் சொன்னூர். ஆகையால் அவரிடத்தில் போய்க் கேட்டால், நம்முடைய பிள்ளையைக் கொன்ற எமனுக்குக் கட்டளையனுப்பி நம்முடைய பிள்ளையை மீட்பிப்பார் என்றுன். அதைக் கேட்டு அவன் மனைவியும் சந்தோஷப்பட்டு, அங்கிருந்தபடியே அவ்விருவரும் நேரே இராமாயண சாஸ்திரி வீட்டுக்குப் போய் அவனைக் கண்டு அவனிடத்தில் காரியத்தைச் சொல்ல, அவன் இவனொரு பேதையாயிருக்கிறுன். நாம் இவனிடத்தில் நல்ல வரும்படி பெற்றுக்கொள்ளலா மென்று தனக்குள்ளே நினைத்துக்கொண்டு நல்லது நான் அந்த எமனைச் சாவகாசமாய்க் கண்டு பேசிப் பிள்ளையை மீட்டுத் தருகிறேன். நீ ஒன்றுக்கும் பயப்படாதே! நீ வீட்டுக்குப் போய், என் பிள்ளையைக் கொண்டு போய்ப் புதைத்துவிடு. இன்னும் இரண்டொரு மாதத்திற்கெல்லாம் உன் பிள்ளையை வரவழைத்துத் தருகிறேனென்று திடஞ்சொல்ல, அதைக் கேட்ட அவ்வகதி மிகச்சந்தோஷமடைந்து தன் மனைவியை யழைத்துக் கொண்டு வீட்டுக்குப்போய் பிள்ளையை எடுத்து இடுகாட்டிற் புதைத்து விட்டான்.

அன்றுமுதல் அக்குடியர்னவன் தினந்தோறும் ஐயர் வீட்டுக்குப் போய் அவனைக் கண்டு, அவனுக்கு வேண்டிய சிற்றூழியங்களெல்லாம் செய்து, தன் வரும்படியிற் கொஞ்சம் மீத்து அவனுக்கு காணிக்கையாகக் கொடுத்து வருவான். அவன் சொன்ன கெடுவும் வந்துவிட்டது. அவன் பிள்ளை எங்கே பென்று கேட்டதற்கு, அவன் அந்த எமனூரிலில்லையாம் அவன் வந்தவுடன் வரச்சொல்லியிருக்கிறேன். அப்பொழுது ஆகட்டும், நீ அவசரப் படாதேயென்று சொன்னுன். இப்படியே அநேக கெடுவுகள்வைத்தும் பிள்ளை வராததினுல் இவனும் மனஞ்சலித்துப் பின்னும் அவனைத் தினந்தோறுங் கண்டு கேட்டுக் கொண்டே வந்தான். பின்பு ஒரு நாள் இராமயண சாஸ்திரியார், உத்தரகாண்டத்தில் சாம்புவன் வதைப்படலத்தைப்பிரசங்கித்தான். அப்பொழுது பிள்ளையை இழந்த அவ்வேழையும் வந்திருநதான். அநதச் சந்தர்ப்பத்தில் ஒரு பார்ப்பனன் குழந்தை இறந்துபோனதாகவும் அப்பார்ப்பனன் இராஜாவின் அநீதியினுல் இக்குழந்தை இறந்ததென்றும் நினைத்து பிள்ளையை யெடுத்துக்கொண்டு இராமர் அரண்மனை வாயிலண்டை வந்து கூக்குரலிட அதைக் கேட்ட இராமன் திடுக்கிட்டு ஓகோ ஏதோ பிசகு நேரிட்டிருக்கிறதென்றும் வெளியே போய் காடுகளையெல்லாம் சுற்றிப் பார்த்து, வருகிறபொழுது பார்ப்பனரல்லாதார் சாதியில் பிறந்தவனுகிய சாம்புவன் என்பவன் தவஞ் செய்வதைக் கண்டு, யுகதர்மத்திற்கடாத காரியத்தை அவன் செய்தானுகையால். அப் பார்ப்பனன் பிள்ளை இறந்ததென நினைத்து அவனை வெட்டிப்போட, பார்ப்பனன் பிள்ளை உயிர் மீண்டது என்று சொல்லி, "பார்த்தீர்களா ஜனங்களே! சூத்திரனுகிய அச்சாம்புவன் தவஞ் செய்யப்போமோ! அன்றியும் அவனைத் தவஞ்செய்ய வேண்டாமென்றுலும் அவன் கவனியான்! மயிலே மயிலே இறகு போடென்றுற் போடுமா! ஆகையாற்றுன், அப்பார்ப்பனன் பிள்ளையைப் பிழைக்க இராமர் அவனை ஒரே வெட்டாக வெட்டிப் போட்டார்" என்று பிரசங்கித்தான்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த அக்குடியானவன், ஓகோ நாமும் இப்பார்ப்பனனைச் சகசத்தில் கேட்பதினுலன்றோ, சாக்குப் போக்குச் சொல்லுகிறுன். இவனைக் கேட்கிற வழியாய் கேட்க வேண்டுமென்று நினைத்து, ஒரு பெரிய தடியெடுத்துப் போய், அவன் வருகிற மார்க்கத்தில் நின்றுகொண்டிருந்து. இராமயண சாஸ்திரியார் பிரசங்கம் முடித்துவருகிற சமயத்தில்,"ஐயா! என் பிள்ளையை பிழைக்கும்படி சகசத்தில்கேட்டால்நீர் நாட்போக்கு கிறீர், இப்பொழுதாகிலுந் தாருமென்று தன் கையிலிருந்த தடிக் கம்பினுல் அவனை நன்ருய் புடைத்தான். அவன் அந்த அடியைத் தாங்கமுடியாமல் கூக்குரலிட, ஜனங்களெல்லாம் வந்து கூடி என்னென்று விசாரித்தபொழுது அந்த ஏழை மனிதன் தன் பிள்ளை பிறந்தது முதல் எல்லாவற்றையும் சொல்லி இப்பார்ப்பனன் பிள்ளையைத் தருகிறேனென்று தாமதித்தானென்றும் கடைசியாய் இராமர் பார்ப்பனன் பிள்ளையை மீட்பிக்க சாம்புவனைக் கொன்றதுபோல இவரைப் புடைத்தால்தான் என் பிள்ளை வருமென்று அடித்தேனென்றும் சொன்னுன். அதைக் கேட்ட ஜனங்கள் அவன் பேதை யென்றறிந்து ஐயரைச் சமாதானப் படுத்தி வீட்டுக்கனுப்பிவிட்டார்கள். அதுமுதல் அப்பார்ப்பனன் நாமில்லாது சொன்னதினுலல்லவோ படாதபாடுபட வேண்டிய தாயிற்றென்று நினைத்து கொஞ்சகாலம் கழித்து சென்னை நகரைவிட்டுத் தன்னூர் போய்ச் சேர்ந்தான்—இது ஒரு பழங் கதை.

இடம் மாற்றம்

எங்கள் வாடிக்கைக்காரர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் அறிவிப்பது என்னவென்றுல், எங்கள் பிளாக் கம்பெனி இடவசதி இல்லாத காரணத்தால் கீழ்க்கண்ட விலாசத்திற்கு மாற்றி இருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்படிக்கு
மேனேஜர்
மதருஸ் பிராசஸ்
22-7 வீரரான் சாயபு தெரு,
மவுண்ட்ரோட்,
மதருஸ்.

நம் மேடை

மதுரை
17-7-55
பேசுவோர்
நாஞ்சில் மனோகரன்
எஸ். முத்து
இடம் :
கீழமார்க்கெட் அண்ணா திடல்

◉

பெரம்பூர்
17-7-55
சி. பி. சிற்றரசு

◉

தருமபுரி
21-7-55
சி. பி. சிற்றரசு

◉

செங்குன்றம்
22-7-55
சி. பி. சிற்றரசு

◉

நகிரி
23-7-55
சி. பி. சிற்றரசு

◉

பெங்களூரில் பொதுச்செயலாளர்

பெங்களூர் நகர் அக்கிப்பேட்டை தி.மு.க. சார்பாக, மாவட்டக்கழக துணைகொண்டு **17-7-55** ஞாயிறு அன்று பொதுச்செயலாளர் நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு ஓர் மாபெரும் வரவேற்பு வழங்கப்படும். அன்று காலை புகை வண்டி நிலையத்தில் வரவேற்பு வழங்கப்படும். பிறகு உறுப்பினர் கூட்டமும், மாவட்ட தேர்தலும் நடைபெறும். மாலை 2-30 மணிக்கு திரு.ஆர் ஆறுமுகம் அவர்கள் தலைமையில் ஓர் மாபெரும் ஊர்வலம் வ.உ.சி. திடலில் இருந்து துவங்கி பல முக்கிய வீதிகள் வழியாகச் சென்று இறுதியாக சிக்கலால் பார்க்கில் முடிவு பெறும். பிறகு மாலை 6 மணிக்கு பெங்களூர் மாவட்டச் செயலாளர் திரு. ஏ. டி. பிரான்சிஸ் அவர்கள் தலைமையில் பொதுச்செயலாளர் திரு. இரா. நெடுஞ்செழியன், ஜே. கனகசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

வெண்பாப் போட்டி

11. செந்தமிழா இன்பத் திராவிடா தென்னகத்தில் இந்திவரு மானல்நீ என்செய்வாய் ?—

(இரட்டைப் புலவர் முறை)

வெண்பாப் போட்டி 11 க்கு வந்துள்ள வெண்பாக்களில் பரிசு பெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்களையும் வெளியிட்டுள்ளோம். தென்றல் முதல் இரண்டடிகளைத் தந்துள்ளதால், ஒவ்வொரு வெண்பாவின் மீதி இரண்டடிகளைப் பிரசுரம் செய்துள்ளோம்.

◉ செந்தமிழா இன்பத் திராவிடா தென்னகத்தில்
இந்திவரு மானல்நீ என்செய்வாய்? முக்தியென்மூ
தாதை நடராசன் தாளமுத்து சென்றிட்ட
பாதையிற் செல்லுவேன் பார்.

—இரெ. தங்கையா, பி. ஏ. பெரியநாயக்கன்பாளையம்.

★

--வந்திட்டால்
தந்தி கொடுத்திடுவேன் தாளமுத்(து), இராசனுக்கும்
வந்திடுவேன் என்ன வரைந்து.

—இளசை. இளங்கோவன், திருச்சி.

★

--செந்தமிழின்
தீபச் சுடரேந்தித் திக்கெட்டும் நான்பரப்பிப்
பாப மொழியழிப்பேன் பார்.

—ஆ. வி. நாதன், கோவை.

★

--சொந்த
வலியும் இழந்து வயாவான் நலிந்த
புலிதான் நுகர்க்குமோ புல்?

—கி. சௌந்தரராஜன், பண்ணைக்காடு.

★

--செந்தமிழச்
சிங்கம் கனன்றெழும்; ஏதிலரின் ஆணவத்தைப்
பங்கம்செய் தெய்தும் புகழ்.

—வை. சுப்பிரமணியன், நாகர்கோவில்.

★

--எந்தமிழைக்
கொல்ல வருவோரின் குள்ளநரிச் செயலை
வெல்லுவேன் போரில் விரைந்து.

—டி. வி. பச்சையப்பன், மதுரை.

★

--இந்தா கேள்
கண்ணகிக்குக் காலுண்டு கற்பிழந்த இந்திப்பெண்
புன்னகைக்கும் போர்நகைக்கும் மாற்று.

—தேன்குழலி, பாப்பாரப்பட்டி.

★

--சிந்தனையேன்
சூரியன்முன் மின்மினியாக் தூய்தமிழ்முன் மற்றமொழி
ஆரியம்பேச் சற்ற தறி.

—கு ப. தாயுமானசாமி அய்யம்புதூர்.

★

--வந்தவுடன்
ஆட்டுவித்து ஆடுகின்ற ஆண்மைகெட்ட ஆட்சியினை
வேட்டுவைத்து ஓட்டிடுவேன் நான்.

—ச. மருதமுத்து, உடுமலை.

★

--முந்தி
ஆலவட்டம் வீசுவையோ? அஞ்சிப் பதுங்குவையோ
கோலெடுத்துத் தாக்குவையோ கூறு.

—கருஞ்சிவலை, இலங்கை.

★

--குத்துதற்கு
வால்பிடித்து வண்மை வளர்ப்போதை மாய்த்தற்கு
வேல்பிடித்துச் செல்வேன் விரைந்து.

—வாசன், வேலூர்.

--கொந்தளிக்
கொஞ்சு மமுதமொழி நெஞ்ச மழிவதற்கு
நஞ்சு கலப்பதுவோ காண்.

—மு. தேவராசு, கோயமுத்தூர்.

★

--சொந்தப்
புலிக்குகையில் வெள்ளாடு போகுமானல் அன்பே
எலிக்கதையை நீக்கிநீ எண்ணு.

—இசைச்செல்வன், அம்பத்தூர்.

★

--என்றனுயிர்
அன்னைத் தமிழ்காக்க அஞ்சேன் மொழிப்போரில்
என்வரினும் ஏற்பேன் இசைந்து.

—வி. ப. கோவிந்தசாமி, சென்னை-12.

★

--என்றமிழின்
செஞ்சுவை சொற்பஞ்ச இந்தியில் உண்டாமோ
நஞ்சை அருந்துவையோ நீ.

—ஜெயபாலன், அருப்புக்கோட்டை.

★

--கொந்து கொந்து
புண்ணையாற்று விட்டால் பயனில் பயனுண்டப்
புண்ணைப் புறக்கணித்த போது.

—என். வல்லி கோட்டுச்சேரி.

★

--இந்தா கேள்
ஏனோ உமக்கையம் யான்பெற்ற இவ்வுயிர்தான்
தேனோ தினைமாவோ செப்பு.

—பசுமணி, பாப்பாரப்பட்டி.

★

--உந்திபோல்
செந்நீர் உகுத்தேனும் நீந்தமிழ் நாட்டினின்றும்
நந்தல் செயாதொழிப்பேன் நான்.

—இரா. சண்முகம், பண்ணைக்காடு.

★

--வந்தவழி
செல்ல விலையானல் தென்னவனே சண்டியதை
நில்லா வகையடிப்பேன் நான்.

—அடைக்கலக்குளன். கோவிலூர்.

★

--முந்திய
குட்டு மறந்துவிட்ட குற்றத்தை ஆற்றேரும்கான்
வெட்டொன்றில் துண்டிரண்டாம் வீழ்ந்து.

—கொங்கிறை. பந்தாரகள்ளி.

★

--எந்தவினைச்
செய்தாய்நீ சிற்றெலிகள் செய்குறும்பைச் சிங்கமது
கொய்யாதோ கூண் டுகிரல் கொண்டு.

'குன்றன்', பந்தாரகள்ளி.

★

--மொந்தெயுறக்
கட்குடித்த வானரந்தான் காலிடறி வேங்கைமேல்
தட்டுற்றால் என்னாகும் சாற்று.

—'முகிலன்', பரூர்.

★

--செந்தமிழன்
சிந்துவான் கண்ணீர்தான்சி.சுப் பிரமணியம்
சந்தியில் நிற்பாரால் சற்று.

—மாசிலாமணி' உறையூர்.

★

--முந்திடுவன்
செந்தமிழைக் காத்திடவே போராடிச் செங்குருதி
சிந்திடுவேன் அஞ்சுகமே நான்.

—எஸ். அச்சுதன், பாளையம்பட்டி.

★

--குந்தியிரேன்
மானம் படுமுன்னே மாத்தமிழைக் காத்திடற்குத்
தானம் எனதுயிர் தான்.

—க. குணசேகரன், சென்னை-3.

★

--எந்தோழா
இந்தி இலக்கண விந்தையைக் காட்டியே
சந்தி சிரித்திடச் செய்.

—இளமுருகு, அருப்புக்கோட்டை.

★

--இந்தநாள்
முற்றும்நாம் எச்சரித்தும் மூர்க்கத்தைக் காட்டுவதால்
அற்றைநற் சேரனு வேன்.

—மு. சீனிவாசன், வத்தலக்குண்டு.

◉ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

கேள்விப் பெட்டி

மதுரைநாதன், மதுரை.

◉ உங்கள் கட்சிக் கண்ணியத்திற்கு ஒரு உதாரணம் தரமுடியுமா ?

எந்த ஊரில் வேண்டும் தோழரே, உங்கள் நகரிலேயே சொல்லட்டுமா ? விலக்கப்பட்டவர்கள், தாங்களே விலகிவிட்டதாகக் கூறி 'திடீர் தலைவர்'களானதை பார்த்து மகிழ்ந்தோமே இது போதாதா ?

சுந்தரம், சீலோன்.

◉ தகுதிக்குப் புறம்பான காரியங்களைச் செய்வது ?

தாங்களும் தகுதிக்குப் புறம்பானவர்களாக விரைவிலே ஆக்கப்படுவதற்கு !

வசந்தன், வண்ணை.

◉ சென்றவாரம் வண்ணாரப்பேட்டையில் கண்ணதாசன் கலந்துகொண்ட கூட்டத்தில் என்ன நடந்தது ?

ஒரு விசித்திரமான நிகழ்ச்சி நடந்தது ; காங்கிரஸ் எம். எல். ஏ. யை காங்கிரஸ்காரர்களே 'மேடையை விட்டு இறங்குகிறாயா இல்லையா' என்றார்கள் !

◉ வாழ்வு மாயம், காயம் பொய் என்ற கொள்கையை உங்களால் மறுக்கமுடியுமா ?

இவை கொள்கையல்லவே ! கொள்கைதானென்றால் அந்தக் கொள்கைக்காக அத்தகையோர் செத்து அல்லவா காட்டியிருக்க வேண்டும் ! வாழ்வு மாயமென்போர் வாழக்கூடாதல்லவா !

'ரியல் கம்யூனிஸ்ட்', மாயூரம்.

◉ யார் இந்தக் கம்யூனிஸ்டுகள் ?

இருந்துவந்த இடங்களிலெல்லாம் தோல்விகண்டு ஓடிவந்தோரின் 'இருண்ட வீடு' அந்தக் கட்சி ! அவர்களைப்பற்றி நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள்.

வெற்றிமணி, தியாகராயநகர்.

◉ உங்கள் கட்சி முதலாளிக் கட்சி என்று அவர்கள் சொல்லுகிறார்களே ?

எவர்கள் ? கம்யூனிஸ்டுக் கட்சியினர்தானே ! ஆத்திரப்படாதீர்கள். அதில் அர்த்தமிருக்கிறது. அவர்களைக் காட்டிலும் நாம் சிந்தனைக்குப் பஞ்சமில்லாதிருக்கிறோம் ; எழுத, பேச, ஆட்களுக்குப் பஞ்சமில்லாதிருக்கிறோம் ! அவர்கள் இவைகளிலும் ஏழையாக அல்லவா இருக்கிறார்கள். அதனால் அவர்கள் நம்மை முதலாளிகள் என்றுகூறியிருக்கிறார்கள்--அறிவாற்றல் துறையில்!

தெய்வநாயகன், திருப்புத்தூர்.

◉ நேருவும், அண்ணாவும் சந்தித்தால்...?

மறுமுறை நேரு தென்னாட்டுக்கு ராஜாங்க 'விருந்தினரா'கத்தான் வருவார்.

பணந்தேடி, பரமக்குடி.

◉ நான் சீக்கிரம் பணக்காரனாக வேண்டும்; அதற்கொரு குறுக்கு வழி சொல்ல முடியுமா ?

ஒரு பெரும் பணக்காரர் வீட்டுக்கும் உங்கள் வீட்டுக்கும் இடையிலே உள்ள தூரம்தான் அதற்கு 'ஷார்ட் கட்'.

சேதுமாதவன், இராமேஸ்வரம்.

◉ அடிமை நாட்டுக்கும் சுதந்திர நாட்டுக்கும் வித்தியாசம்தேவை?

நல்லகேள்வி ! இந்தியா அடிமையாக இருந்தபோதும், சுதந்திரம் பெற்றபிறகும் வாழ்ந்து பழகிய நீர் வித்தியாசம் காணமுடியாத இந்தக் கேள்வியை காமராசரிடம் கேட்டிருக்கவேண்டும்,

மகாதேவய்யர், மைலாப்பூர்.

◉ உங்கள் அண்ணாத்துரைக்கு ஆங்கிலம் சரியாக வராதாமே !

ஐயங்கார்மீர், அப்படியே நினைத்துக் கொண்டிருங்கள் ! அண்ணா ஆங்கிலத்தில் பேசுவதை நீர் கேட்டுவிட்டால், பிறகு, அண்ணாவுக்கு தமிழே வராது என்று சொல்லிவிடுவீர். அது பெரிய ஆபத்து !

'அம்பி', பாகனேரி.

◉ துன்பத்திற்கு முதுமை தட்டுவது எப்போது ?

இன்பம் 'புஷ்பவதி' யாகும் போது.

◉ 'வாழ்வின் ஜீவியக் காதலி'ன் பிறப்பு வளர்ப்பைச் சொல்ல முடியுமா ?

ஓ ! கண்ணிலே பிறந்து, காகிதத்திலே வளர்ந்து கயிற்றிலே முடிவது !

சிதம்பரம், மண்ணடி.

◉ அண்மையில் நடந்த ஒரு இலக்கிய மாநாட்டில் ஒரு புலவர் தி. மு. க. அவருக்கு பெரும் தொல்லை தருவதாகச் சொன்னாரே ?

ஆமாம் ; கேள்விப்பட்டோம். அவரது புதல்வர் கூட தி. மு. க. வைச் சேர்ந்தவராம்.

◉ தமிழரசுக் கழக மாநாட்டைக் கூட ரேடியோவில் சொன்னார்களே !

"சாம்பல் பூசி" யாக இருந்தாலும், அவர்கள் தி. மு. க. விரோதிகளாக இருந்தால் ரேடியோ நிலையத்திலிருந்து அழைப்பே வரும் !

கிருஷ்ணன், சிங்காநல்லூர்.

◉ அண்ணா !—சுருங்கச் சொல்லி பொருள் விளங்க வைக்க முடியுமா ?

ஏன், முடியுமே ! பாசத்தால் 'அண்ணன்,' பொதுப் பொருள் 'அறிஞன்.'

◉ நீங்கள் அதிகமாக யாரை வெறுப்பீர் ?

மழைகாலத்தில் வேகமாக ஓட்டும் மோட்டார் ஓட்டிகளை !

◉ இலக்கியத்தில் தேளைப்பற்றி உண்டா ?

தேளினுடைய காதலைப்பற்றியே இருக்கிறதே ! இன்பந் துய்த்த பிறகு ஆண் தேளையே கொன்று விடுமாம் பெண் தேள்.

◉ போன பொருளை மீண்டும் எடுக்கமுடியாத தொழில் எது ?

எனக்குத் தெரிந்தவரை பத்திரிகைத் தொழில்தான்.

தேசியவாதி, குற்றாலம்.

◉ 'யார் இந்த நேரு' என்று கேட்டவரே யார் இந்தத் தென்றலார் ?

குற்றாலத்திலிருந்தா இந்தத் திடீர்த் தாக்குதல் ! வேடிக்கை ! வேடிக்கை ! குற்றாலத்தை குளிர்ச்சியான இடம் என்று சொல்லுவார்களே ! ஓஹோ, போனவாரம் கூடிய 'பெருந்தலை'களின் பெருமூச்சில் குளிர் ஆவியாகி யிருக்கலாம்.

பூங்காவனம், பட்டுக்கோட்டை.

◉ 'இலட்சியவாதி'க்கு இலக்கணம் என்ன ?

கனவை நினைவாக்கி, நினைவை நிகழ்ச்சியாக்கிக் காட்டுபவன்.

◉ இன்பத்திற்கும் துன்பத்திற்கும் எந்த முறையிலே சொந்தம் ?

துன்பத்திற்கு இன்பம் 'பேரன்' முறை. துன்பந்தோய்ந்த உழைப்பு --அது தந்த பணம்--பணம் தந்த சுகம்--இவையே உறவு முறை !

'காதலன்'-ஆரணமனை சிறுவயல்.

◉ பிறருடைய உமிழ்நீரை எச்சிலென்று கருதும் மனிதன், காதலியின் எச்சிலை தேனென்று கருதுகிறானே ஏன் ?

ஆம் ; திருடிவிட்டு சிறைபுகுந்தால் அவமானம் ; அரசியல் போராட்டத்தில் சிறைபுகுந்தால் புகழ் ; ஆனால் இரண்டும் சிறைவாசம் தானே ! அதுபோலத்தான் !

◉ மனிதர்கள் தெரிந்து செய்யும் தவறுக்கு ஒரு உதாரணம் தரலாமா ?

அற்ப ஆயுள் கொண்ட செயற்கை அழகுக்கு அடிமையாவது !

ஏஜண்டுகள் தேவை

அழகிய காலண்டர்களுக்கு ஆர்டர்கள் எடுக்க ஏஜண்டுகள் தேவை.

ரூ. 15 முன்பணம் அனுப்பினால் ஆல்பம் வகையறா அனுப்பப்படும். மூன்று ஆர்டர்கள் வாங்கிக் கொடுத்தபின், அந்த 15 ரூபாய் திருப்பித் தரப்படும்.

விபரங்களுக்கு :—

நாதன்-கம்பெனி,

[காலண்டர் தயாரிப்பாளர்கள்]

திருச்சிராப்பள்ளி

மாநில மாநாட்டு நிதிக்காக

17-7-55 ஞாயிறு மாலை 6-30 & இரவு 10-30 மணிக்கு

சேலம் விக்டோரியாவில்

[இரு நாடகங்கள்]

சென்னை ராஜேந்திரன் நாடக மன்றத்தின் சார்பில்

S. S. ராஜேந்திரன், D. V. நாராயணசாமி, M. N. ராஜம், M. N. கிருஷ்ணன், இந்திரா, மோகனா நடிக்கும்

" மணிமகுடம் "

புதிய நாடகம்

கதை, வசனம் : கலைஞர் கருணாநிதி

கட்டணம் :—ரூ. 3, 2, 1, தரை அணா 8

நகர தி. மு. கழகம், சேலம்.

ஆசிரியர், வெளியிடுபவர் கண்ணதாசன். அலுவலகம் 2-127, மவுண்ட் ரோடு, சென்னை - 6. அச்சிட்டவர் ஆர். எம். கனகசபாபதி, இளங்கோவன் பிரிண்டர்ஸ், 23, முத்துமுதலி தெரு, சென்னை - 14.